**தலைப்பு 246 - உள்நாட்டு இறைவரித் திணைக்களம்**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தலைப்பு 246 - உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் போதியளவு கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2024 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களதின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 ஜுன் 18 ஆந் திகதி வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள், 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேறகொண்டேன் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16 (1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானங்கள் செலவினங்கள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உபபிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று தயாரித்து பேணப்படுகிறது என்பதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டி இருந்ததுடன் இம் முறைமையின் செயற்றிறன் தொடர்பாக காலத்திற்குக்காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படல்வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல் ஒன்றல்ல மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒருபகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணபட்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு/கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டுக்குரிய நிதிக்கூற்று தொடர்பாக என்னால் வழங்கப்பட்டிருந்த கீழே குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| முன்னைய ஆண்டுக்குரிய அறிக்கையின் பந்திக்கான தொடர்பு | நடைமுறைப்படுத்தப்பட்டிருக்காத பரிந்துரை | இந்த அறிக்கையில் பந்திக்கான தொடர்பு |
|---|---|---|
| 1.6.1.(அ)(i) | திறைசேரி தகவல்கள் மற்றும் திணைக்கள ஏடுகள் என்பவற்றுக்கு இடையே காணப்படும் வேறுபாடுகளை சரியாக இனம் கண்டு சீர் செய்தல் வேண்டும். | 1.6.1.1 (i) |
| 1.6.1.(அ)(iv) | நிச்சயமற்ற கணக்கு மீதியை சரியாக இனம் கண்டு தேவையான சீராக்கல் செய்யப்பட்டு தீர்க்கப்படுதல் வேண்டும். | 1.6.1.1. (iii) |
| 1.6.1.(ஆ) | மாதாந்த வருமானம் சரியாக பதிவிடப்பட வேண்டும். | 1.6.1.2 |
| 1.6.1.(இ) | வருமான வகைப்படுத்தல் பிழைகள் தீர்க்கப்பட வேண்டும். | 1.6.1.3.(iii) |
| 1.6.2.(அ), (ஆ) | சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களத்திடமுள்ள அனைத்து சொத்துக்களும் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். | 1.6.2.1., 1.6.2.2. |

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதி செயலாற்றல் கூற்று

**(அ) வருமான பெறுவனவுகள்**

திணைக்களத்திற்குரிய வருமான பெறுவனவுகளை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| **(I)** | **இணக்கமின்மைகள்** | | |
| (i) | கூட்டு அல்லாத வருமான வரியின் கீழ் இலக்கம் 1004.02.99 கொண்ட ஏனைய வருமானக் குறியீடு, வருமானக் குறியீட்டினைப் போன்றே கட்டுப்பாட்டுக் கணக்காகவும் செயல்படுவதுடன் மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுகளில் ACAI மீதிகளைப் பரீட்சிக்கும் போது திறைசேரி தகவல்களுக்கு அமைய, மேலே குறிப்பிட்ட கட்டுப்பாட்டுக் கணக்கிற்காக ரூபா. 48,533,060,340 செலவு வைக்கப்பட்டிருந்த போதிலும் திணைக்களத்தினால் வருமான வகைப்படுத்தலின் போது கட்டுப்பாட்டுக் கணக்கில் கணக்கீடு செய்யப்பட்டிருந்த வருமானம் ரூபா. 48,353,957,373 என அடையாளம் காணப்பட்டிருந்த காரணத்தால் ரூபா. 179,102,967 இற்கான இணக்கமின்மை அவதானிக்கப்பட்டது. இது தொடர்பில் கணக்காய்விற்கு வழங்கப்பட்டிருந்த பதிலுக்கு அமைய இந்த வித்தியாசத்தினால் கட்டுப்பாட்டுக் கணக்கிலிருந்து மீளச் செலுத்தல் ரூபா. 402,684 சீராக்கப்பட்டதன் பின்னர் இன்னமும் ரூபா. 179,505,651 வித்தியாசம் உள்ளது என்பது அவதானிக்கப்பட்டது. | பொருந்தாமையை இனம் கண்டு இணக்கம் செய்யும் போது வித்தியாசம் காணப்பட்ட போதிலும், எதிர்காலத்தில் முடிந்த வரையில் சரியாக இணைக்கப்படுத்துதல் நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படும் என்பது. | திறைசேரி தகவல்களுக்கு அமைய, திணைக்களத்தினால் வருமான வகைப்படுத்தல் கட்டுப்பாட்டுக் கணக்கு சரியாக இணக்கப்படுத்துதல் வேண்டும். |
| (ii) | 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான வருமானக் கூற்று திணைக்கள வருமான சேகரிப்பிற்கு அமைய மொத்த வரிப் பெறுகை ரூபா. 1,550,589,866,148 ஆன போதிலும் 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான காசுப் பாய்ச்சல் கூற்றினுள் மொத்த வரிப் பெறுகையாக ரூபா. 1,553,438,481,285 காட்டப்பட்டுள்ளதால் ரூபா. 2,848,615,137 ஆன வித்தியாசம் உள்ளது என்பது அவதானிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் கணக்காய்விற்கு | வருமான சேகரிப்பு மற்றும் மொத்த வரி பெறுகை என்பன குறித்த காலத்தில் முடிந்த வரையில் சரியாகக் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | வருமான சேகரிப்பு மற்றும் மொத்த வரி பெறுகை என்பன முடிந்த வரையில் சரியாக இனம் காணப்பட்டு குறித்த காலத்தில் சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வழங்கப்பட்டுள்ள இணக்கக் கூற்றுக்கு அமைய இந்த வித்தியாசத்தில் இருந்து மூலதன இலாப சீராக்களின் அடிப்படையில் பெறுமதி ரூபா. 1,959,535,962 சீராக்கப்பட்டதன் பின்னரும் இன்னமும் வித்தியாசமாக உள்ள ரூபா. 889,079,175 இற்கு பல்வேறு காரணங்கள் தாக்கத்தை ஏற்படுத்தி இருந்தது என்பது அவதானிக்கப்பட்டது. | | |
| (iii) | 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் RAMIS கணினி ஒழுங்கு அமைப்பினுள் வுஐடீ இலக்கம் 100886553 இன் கீழ் ரூபா. 5,211,312,210 ஆன தொகை தீர்க்கப்படாது நிச்சயமற்ற மீதியாகக் காணப்பட்ட காரணத்தால் நிலுவை வரி மீதி அந்தத் தொகையினால் மிகைக் கணக்கீடாகி இருந்தது என்பதால், அந்த தீர்க்கப்படாத மீதி 2015 ஆம் ஆண்டு தொடக்கம் அதாவது, சுமார் 08 வருடங்களுக்கு அதிக காலம் முழுவதும் தீர்க்கப்படாது வந்துள்ளது என்பது அவதானிக்கப்பட்டது. | 2024 ஜுன் 30 ஆம் திகதியில் மீதி ரூபா. 4,904,067,442 ஆக உள்ளதுடன் இந்த மீதியையும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்பது. | நிச்சயமற்ற மீதி சரியாக இனம் காணப்பட்டு தீர்ப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (iv) | வருமானம் சேகரிக்கப்படும் வங்கிக் கணக்கின் மூலம் திறைசேரிக்கு வரவு வைக்கப்படும் தொகை, வங்கிக் கணக்குக் கூற்றுடன் ஒப்பிட்டு இனம் காணப்பட்டுள்ள வித்தியாசங்களைச் சரி செய்வதற்கு காலத்துக்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டதனால் வருமானக் கணக்கீடு தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டில் குறைபாடுகள் காணப்படுகின்றன என்பது அவதானிக்கப்பட்டது. | வரி செலுத்துபவர்களினால் கொடுப்பனவு பத்திரம் பூரணப்படுத்தும் போது ஏற்பட்ட தவறுகள், வங்கியில் ஏற்பட்டிருந்த தவறுகள், காசோலைகள் மதிப்பிழந்தமை போன்றவை காரணமாக ஏற்பட்ட இணங்காமை முழுமையாக சரி செய்யப்பட்டதன் பின்னர் வகைப்படுத்தல் அறிக்கையை ஒழுங்கான முறையில் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பது. | வருமானம் சேகரிக்கப்படும் வங்கிக் கணக்குகளில் இருந்து திறைசேரிக்கு வரவு வைக்கப்படும் தொகை சரியாக இணக்கப்படுத்தப்பட வேண்டும். |
| **(II)** | **மாதாந்த வருமான அறிக்கையிடலின் துல்லியத் தன்மை** | | |
| | அரச நிதிக் கொள்கை சுற்றறிக்கை இலக்கம் 01/2015 இன் 4 | மூலதன இலாபத்தின் மீதான வரி தொடர்பில் 2023 ஆம் ஆண்டு இறுதி 04 | 2015 ஜுலை 20 ஆம் திகதி இடப்பட்ட அரச |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் 4(இ) பிரிவுகளுக்கு அமைய அந்தந்த வருமான விடயங்களின் கீழ் எதிர்வரும் மாதத்தின் முதலாவது வாரத்தினுள் சரியான வருமான வகைப்படுத்தல இனம் காணப்படுதல் வேண்டும் என வழிகாட்டப்பட்டுள்ள போதிலும், அதற்கு அமைய மீளாய்வாண்டினுள் வருமானக் குறியீட்டின் கீழ் ஒன்பது மாதங்களுக்கு உரியதாக சேகரிக்கப்பட்ட வருமானங்கள் அந்த மாதத்தினுள் இனம் காணப்பட்டிருக்கவில்லை.<br>மேலும் இங்கு, 1004.05.00 வருமானத் தலைப்பின் கீழுள்ள மூலதன இலாபத்தின் மீதான வரி 2023 செப்டம்பர், ஒக்டோபர், நவம்பர் மற்றும் திசெம்பர் ஆகிய ஒவ்வொரு மாதங்களிலும் வருமான வகைப்படுத்தல் அறிக்கையினுள் இனம் காணப்பட்ட போதிலும் ஒவ்வொரு மாதங்களிலும் திறைசேரி மாதாந்த கணக்கு பொழிப்புகளில் உள்ளடக்கப்படும் போது குறித்த மாதங்களுக்கு வெவ்வேறாக இனம் காணப்படாது 2023 திசெம்பர் மாதத்தில் திறைசேரி மாதாந்த கணக்கு பொழிப்பில் மட்டும் 03 மாதங்களுக்கு உரிய திரண்ட வருமானம் சீராக்கப்பட்டுள்ளது என்பதனால் அந்தந்த மாதங்களின் உண்மையான வருமான சேகரிப்பு தொடர்பான சரியான தகவல்கள் அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை என்பது மேலும் அவதானிக்கப்பட்டது. | மாதங்களிலும் ஒழுங்கமைப்பின் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட அறிக்கையை ஒப்பிடும்போது வித்தியாசம் காணப்பட்டது என்பது 2024 ஜனவரி மாதம் இனம் காணப்பட்டிருந்ததுடன், குறித்த மாதங்களுக்காக வெவ்வேறாக திருத்தப்பட்ட வருமான வகைப்படுத்தல் அறிக்கைகள் (A 75) தயாரிக்கப்பட்டு உரிய பிரிவிற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | நிதிக் கொள்கை சுற்றறிக்கை இலக்கம் 10/2015 இன் பிரகாரம் வருமான அறிக்கை ஒழுங்கான முறையில் தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| **(III)** | **வருமான வகைப்படுத்தல் குறைபாடு** | | |
| (i) | இரு வருமானத் தலைப்புகளின் கீழ் இருந்த வித்தியாசங்களைச் சீராக்குதல் ரூபா. 979,840,248 ஆன இரு மாற்றல் பத்திரங்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அந்த தவறை திருத்துதல் 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான வருமானக் கூற்றினுள் ACA 01 படிவத்தில் திணைக்கள வருமான சேகரிப்பின் | எதிர்காலத்தில் ACA 01 படிவத்தின் பிரகாரம் தகவல்களை சரியாக சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | வருமானக் குறியீடு சரியாக இனம் காணப்பட்டு வருமானம் வகைப்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கீழ் மொத்த பெறுமதியாகக் காட்டப்பட்டிருக்க வேண்டிய போதிலும் அதில் தேறிய பெறுமதி பதிவிடப்பட்டிருந்தமையும், தவறு திருத்தப்படுதல் அந்த குறித்த பகுதியினுள் காட்டப்படாததாலும் ACA படிவத்தின் மூலம் தகவல் சரியாகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ii) | திணைக்களத்தினால் சேகரிக்கப்படும் சேகரிப்புப் பெறுமதியின் மீதான வரி வருமானம் திறைசேரியில் பேணப்பட்டு வரும் கட்டுப்பாட்டுக் கணக்கில் வரவு வைக்கப்படுவதுடன் பின்னர் நிதியானது மாதாந்த பொழிப்பின் மூலம் நிதிச் சேவைகள், ஏனைய சேவைகள் மற்றும் உற்பத்தி ஆகிய சேகரிப்பு பெறுமதிகளின் மீதான வரி வருமானக் குறியீடுகள் மூன்றிற்கும் கணக்கீடு செய்தல் மேற்கொள்ளப்படும்.<br>மீளாய்வாண்டில் திணைக்கள மீதி பரீட்சிப்புக்கு அமைய சேகரிப்பு பெறுமதி மீதான வரிக் கட்டுப்பாட்டு கணக்கில் (1002.01.00) ரூபா. 1,068,469,869 இணங்காமை காணப்பட்டதுடன் மாதாந்த கணக்குப் பொழிப்பின் மூலம் கணக்கீடு செய்யப்பட்டதன் பின்னர் மீளாய்வாண்டின் இறுதியில் கட்டுப்பாட்டுக் கணக்கில் மீதியாகக் காணப்பட்ட மேலே குறிப்பிடப்பட்ட மீதிகள் வருமானக் குறியீட்டுக்கு அமைய இனம் காணப்படாது 1004.02.99 எனும் ஏனைய சேவைகள் வருமானக் குறியீட்டிற்கு மாற்றல் பத்திரத்தின் மூலம் மாற்றப்பட்டதன் மூலம் சேகரிப்பு பெறுமதி மீதான வரி நிதி சேவைகள், ஏனைய சேவைகள் மற்றும் உற்பத்திகள் ஆகிய மூன்று வருமானக் குறியீட்டிலும் தேறிய வருமானத்தின் துல்லியத்தன்மை கணக்காய்வில் உறுதிப்படுத்தப்படவில்லை. | ரூபா. 1,068,469,869 பெறுமதியானது சேகரிக்கப்பட்ட பெறுமதி மீதான வரிக் கட்டுப்பாட்டுக் கணக்கில் வகைப்படுத்தப்படாத மீதியாக உள்ளதுடன் அந்தக் கட்டுப்பாட்டுக் கணக்கில் வருட இறுதியில் மீதி பூச்சியமாக இருக்க வேண்டிய போதிலும் அந்த வித்தியாசம் வேறு வரிக் கணக்கிற்கு (1004.02.99) மாற்றப்பட்டிருந்தது என்பது. | வருமானக் குறியீடு சரியாக இனம் காணப்பட்டு வருமானம் வகைப்படுத்தப்ப ட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | 2023 அரச கணக்குகள் வழிகாட்டல் இலக்கம் 05/2023 சுற்றறிக்கைக்கு அமைய அரச கணக்குகள் திணைக்களத்தின் இணைய தளப் பக்கத்தில் உள்ள படிவங்களுக்கு அமைய வருமானத் தலைப்பு 2003 பெப்ரவரி 22 ஆம் திகதி கசினோ அனுமதிப் பத்திரக் கட்டணம் தனியான வருமான தலைப்பின் கீழ் காட்டப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் நிதிக் கூற்றுகளில் ACA 1 இற்கு அமைய 2003.02.22 வருமான தலைப்பு கசினோ அனுமதிப் பத்திரக் கட்டணம் தொடர்பில் வருமான மதிப்பீடு காட்டப்பட்டிருந்த போதிலும் வருமான சேகரிப்பு பூஜ்ஜியம் ஆகும். எவ்வாறு இருப்பினும் 2024 மார்ச் 20 ஆம் திகதி கணக்காய்விற்கு கிடைத்திருந்த திருத்தப்பட்ட வருமான வகைப்படுத்தல் அறிக்கைக்கு அமைய கசினோ அனுமதிப் பத்திரக் கட்டணமாக ரூபா. 500,000,000 ஈட்டப்பட்டிருந்தது எனக் காட்டப்பட்டிருந்த போதிலும் அந்த தகவல்கள் மேலே கூறப்பட்ட வருமானத் தலைப்பின் கீழ் நிதிக் கூற்றுகளில் காட்டப்பட்டிருக்கவில்லை. | 2024 மார்ச் மாதத்தில் பந்தயம் மற்றும் சூதாட்ட வரிகள் பிரிவினால் இனம் காணப்பட்டு அதற்கு அமைய 2023 திசெம்பர் மாத வருமான வகைப்படுத்தல் அறிக்கை திருத்தப்பட்டுள்ளது என்பது. | வருமானக் குறியீடு சரியாக இனம் காணப்பட்டு வருமானம் வகைப்படுத்தப்பட வேண்டும். |

### 1.6.2. நிதி அல்லாத சொத்துக்கள்

ஆதனங்கள் பொறிகள் மற்றும் கருவிகளைக் கணக்கீடு செய்யும் போது கீழே குறிப்பிடப்பட்டுள்ள குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|---|
| (i) | நிதி அல்லாத சொத்துக்களை மதிப்பீடு செய்தல் தொடர்பில் 2018 டிசம்பர் 31 ஆம் தேதி கொம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்தினால் வழங்கப்பட்டுள்ள சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கை இலக்கம் 04/2018 மற்றும் | குருணாகல் காணியினை மதிப்பீடு செய்வதற்குரிய மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் கோரப்பட்டுள்ள உரிமையை உறுதிப்படுத்தும் ஆவணம், வரைபட பிரதி, கட்டட விபரப் பட்டியல் மற்றும் கட்டட திட்ட | நிதி அல்லாத மதிப்பீட்டு வழிகாட்டலுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்பட்டு குறித்த சொத்துக்கள் |

| | | | |
|---|---|---|---|
| | அதற்குரிய வழிகாட்டல்களுக்கு அமைய, அனைத்து கட்டடங்களும் மதிப்பீடு செய்யப்படுதல் அத்தியாவசியமானது எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் குருணாகல் பிரதேச அலுவலகம் அமைந்துள்ள காணி, இதுவரையிலும் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை என்பதனால் 2105 வருமானத் தலைப்பின் கீழ் 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் காட்டப்பட்டிருந்த காணி மற்றும் காணி அபிவிருத்தி செய்தல் பெறுமதி ரூபா. 2,081,300,000 எனக் காட்டப்பட்டிருந்த பெறுமதி, இந்த குருணாகல் பிரதேச அலுவலகம் அமைந்துள்ள காணியின் 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் நிலவிய சந்தைப் பெறுமதியிலிருந்து குறை கணக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பது கணக்காய்வினால் அவதானிக்கப்பட்டது. | ஆவணம் என்பன திணைக்களத்திடம் இல்லை என்பதனால் தற்போது அந்த ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றது என்பதனால் இதுவரையில் மதிப்பீட்டு அறிக்கையினைப் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளது என்பது. | கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (ii) | மேலே கூறப்பட்ட வழிகாட்டலின் பிரகாரம், செய்யப்பட்டு வரும் நிர்மாணிப்பில் இதுவரையில் மேற்கொள்ளப்பட்டுள்ள மொத்த செலவு செய்யப்பட்டு வரும் வேலையாகக் கணக்கீடு செய்யப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் பிரதான அலுவலகத்தில் அமைந்துள்ள ரூபா. 176,000,000 ஆன ஆரம்ப மதிப்பீட்டின் கீழ் நிர்மாணிக்கப்பட்டு வரும், தற்போது நிர்மாணிப்பு இடைநிறுத்தப்பட்டுள்ள வாகன முற்றத்திற்காக 22 சந்தர்ப்பங்களில் ரூபா.1,399 மில்லியன் தொகை அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு செலுத்தப்பட்டுள்ள தொகையானது செய்யப்பட்டு வரும் வேலை எனக் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. அதன் தற்போதைய நிலைமையை அவதானிக்கும் போதும், அந்த வாகன முற்றம் கடுமையாக | முன்மொழியப்பட்டுள்ள வாகன முற்றம் தொடர்பில் எடுக்கப்பட வேண்டிய எதிர்கால நடவடிக்கைகளுக்கான தீர்மானத்தினை மேற்கொள்வதற்கு நிதி அமைச்சின் தலையீட்டின் அடிப்படை குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன், தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள நிர்மாணிப்பு தொடர்பில் கட்டட ஆய்வு நிறுவனத்திடம் இருந்து அறிக்கை ஒன்று கோரப்பட்டுள்ளது. அந்த அறிக்கை கிடைத்ததன் பின்னர் எதிர்கால நடவடிக்கைகளுக்கான உடன்படிக்கை தொடர்பில் தீர்மானம் மேற்கொள்ள நிச்சயிக்கப்பட்டுள்ளது என்பது. | சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கையின் அறிவுரைகளின் பிரகாரம் சொத்துக்கள் கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சேதமடைந்தும் மற்றும் பாழடைந்தும் உள்ளது என்பதனால் தற்போதைய மதிப்பீட்டுப் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டுள்ள பெறுமதியிலிருந்து மாறுபடக்கூடும் என்பதனால், கணக்காய்வினால் அதன் பெறுமதி தொடர்பில் திருப்தியடைய முடியாது உள்ளது. | | |
| (iii) | 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் மேற்கொள்ளப்பட்டுள்ள பொருட்கள் கணிப்பாய்வின் மூலம் கணக்காய்வு தினமான 2023 மார்ச் 30 ஆம் திகதி வரையில் வழங்கப்பட்டுள்ள அறிக்கைக்கு அமைய, மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்ட 43 பிரிவுகளுக்கு உரிய பொருட்கள் CIGAS வேலைத் திட்டத்தினுள் உள்ளடக்கப்பட வேண்டும் எனப் பரிந்துரை வழங்கப்பட்டிருந்த போதிலும், அந்த உருப்படிகள் தொடர்பில் 2023 ஜனவரி 01 ஆம் திகதி ஆரம்பம் மீதி சீராக்கலும், 23 பிரிவுகளுக்கு உரிய உருப்படிகள் குறித்த பிரிவினால் வேறு பிரிவுக்கு மாற்றப்பட்டு அல்லது பொருட் பட்டியல் பதிவேட்டில் குறைவாகக் காட்டப்படுவதனால் CIGAS வேலைத் திட்டத்தினுள் இருந்து அகற்றுவதற்கு உரிய சீராக்கலும் செய்யப்பட வேண்டும் எனப் பரிந்துரை வழங்கப்பட்டிருந்த போதிலும் 2024 ஏப்ரல் 04 ஆம் திகதி வரையில் அதற்கு அமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை எனக் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. அதற்கு அமைய நிதிக் கூற்றுகளில் 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் இயந்திரங்கள் மற்றும் இயந்திராதிகளாகக் குறிப்பிடப்பட்டிருந்த ரூபா. 386,875,226 பெறுமதி தொடர்பில் கணக்காய்வினால் திருப்தியடைய முடியவில்லை. | 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான பொருட்கள் கணிப்பாய்வு அறிக்கையின் மூலம் CIGAS வேலைத் திட்டத்திற்குள் உள்ளடக்கப்பட வேண்டும் எனப் பரிந்துரை செய்யப்பட்டதன் பிரகாரம் CIGAS வேலைத் திட்டத்தில் செய்யப்பட வேண்டியது எனக் குறிப்பிடப்பட்டுள்ள திருத்தங்களை மேற்கொள்ளுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | பொருட்கள் கணிப்பாய்வு சபையின் மூலம் வழங்கப்பட்டுள்ள பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துதல் வேண்டும். |

### 1.6.3. கணக்காய்வ சான்றுகள் இல்லாமை

பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் சம்பந்தமாக கணக்காய்வுச் சான்றுகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (i) | திணைக்களத்திற்கு மீளாய்வாண்டில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த 06 கணக்காய்வு விசாரணைகளுக்கு 2024 மே 31 ஆம் திகதி வரையிலும் பதில் சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன், அந்த விசாரணைகளுக்கு உரிய கணக்கீடு செய்யத்தக்க கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா. 66,944,845,547 ஆகும். | 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் அனுப்பப்பட்டிருந்த விசாரணைகளுள் 04 விசாரணைகளுக்கு மட்டுமே பதில் வழங்கப்பட்டிருக்காததுடன் அந்த விசாரணைகளுக்குத் தேவையான தகவல்களைப் பிரிவுகளில் இருந்து சேகரித்தல் மற்றும் பரீட்சிப்பு செய்வதல் என்பவற்றுக்குக் குறிப்பிட்டளவு காலம் தேவை என்பதனால் அந்த 04 விசாரணைகளுக்கான பதில்களை வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது என்பது. | நிதிப் பிரமாணம் 155 இன் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தினால் நிதிப் பிரமாணம் 452 (1) இல் குறிப்பிடப்பட்டுள்ள கணக்காய்வு விசாரணைப் பதிவேடு குறித்த காலத்தின் பின்னர் பரீட்சிப்பு செய்யப்பட்டு கிடைத்துள்ள கணக்காய்வு விசாரணைகளில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகளைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன், அந்த விசாரணைகளுக்கு உடனடியாக பதில் வழங்கப்படுதல் வேண்டும். அவ்வாறு பதில் வழங்கப்படுதல் தாமதம் அடையக்கூடிய விசாரணையாக இருக்குமானால் அதற்கு இடை அறிக்கையினை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (ii) | RAMIS ஒழுங்கமைப்பினுள் செயல்படும் Appeal மற்றும் Objection ஆகிய மொடியூள்களில் காணப்படும் View Appeal மற்றும் View Objection Record ஆகிய துணை மொடியூல்களுக்குள் நுழைவதற்கு கணக்காய்வு பதவியணியினருக்கு விசேட அனுமதி வழங்கப்பட்டிருக்காத காரணத்தால் மற்றும் RAMIS ஒழுங்கமைப்பில் Report மொடியூல் மூலம் உருவாகும் Appeal Registration, Time Bar Report, Settle Appeal Report, Objection Registration, Settled | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு ஆதரவு வழங்குவதைப் புறக்கணித்திருக்காததுடன், தேவையான ஆதரவை வழங்குவதற்கு தொடர்ந்தும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | தேசிய கணக்காய்வு சட்டத்தின் 42 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அல்லது அவரது அதிகாரத்தினைப் பெற்ற நபர் கோரும் ஆவணம் அல்லது அறிக்கையைக் குறித்த காலத்தினுள் சமர்ப்பிக்காமை தவறாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | Objection Report மற்றும் Unsettled Objection Report ஆகிய அறிக்கைகளுக்கு உரிய இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களை ஒழுங்கமைப்பின் மூலம் பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்தது. | | |
| (iii) | உள்நாட்டு இறைவரி திணைக்களத்தினால் சிங்கப்பூர் நிறுவனம் ஒன்றுடன் கைச்சாத்திடப்பட்டிருந்த உடன்படிக்கைகளில் வேறு மூன்றாம் தரப்பினருக்கு உடன்படிக்கை வழங்கப்பட முடியாது எனும் நிபந்தனை உள்ளடக்கப்பட்டிருந்ததனால் அந்த உடன்படிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்கப்படவில்லை என்பதனால் RAMIS ஒழுங்கமைப்பிற்கு உரிய 2014 ஆம் ஆண்டு தொடக்கம் 2023 ஆம் ஆண்டு வரையில் ரூபா. 14,429,237,244 ஆன தொகை செலுத்தப்பட்டமை மற்றும் அதன் முன்னேற்றத்திற்கு உரியவை உடன்படிக்கையின் பிரகாரம் இடம்பெற்றுள்ளதா என்பதைக் கணக்காய்வின் போது உறுதிப்படுத்த முடியவில்லை. | உடன்படிக்கை நிபந்தனைக்கு அமைய வேறு மூன்றாம் தரப்பினருடன் RAMIS ஒழுங்கமைப்பிற்கு உரிய ஆவணங்கள் அல்லது தகவல்களைப் பரிமாறிக் கொள்ளுவதற்கு சிங்கப்பூர் நிறுவனத்தின் எழுத்து மூலம் அனுமதி கிடைத்திருக்கவில்லை என்பதனால், அவ்வாறு வழங்குதல் உடன்படிக்கை நிபந்தனையை மீறுவதாகக் கூடும் என்பதனால், தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்கு உரிய தகவல்களை வழங்குவதற்குள்ள திறன் தொடர்பில் சட்டமா அதிபரின் கருத்தினைக் கோருவதற்கு மீண்டும் 2024 ஓகஸ்ட் 27 ஆம் திகதியிடப்பட்ட கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என்பது. | தேசிய கணக்காய்வு சட்டத்தின் 42 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அல்லது அவரது அதிகாரத்தினைப் பெற்ற நபர் கோரும் ஆவணம் அல்லது அறிக்கையைக் குறித்த காலத்தினுள் சமர்ப்பிக்காமை தவறாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. |

**2. நிதி மீளாய்வு**

**2.1 கட்டுநிதி முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| **2.1.1.** | திணைக்களம் 2023 ஆம் ஆண்டுக்கு கட்டுநிதித் திட்டத்தினை தயாரிக்கும் போது ஆண்டினுள் கோருவதற்குத் திட்டமிட்டிருந்த கட்டுநிதி ரூபா.15,523,229,700 ஆக இருந்ததுடன் ஆண்டினுள் கிடைத்திருந்த மொத்த கட்டுநிதி | கட்டுநிதி முகாமைத்துவத்தின் ஒழுங்கின்மைக்கு தாக்கத்தினை ஏற்படுத்தியிருந்த விடயங்கள் தெரிவிக்கப்பட்டு இருந்ததுடன் முக்கியமாக நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடியினால் | திணைக்களத்தின் கட்டுநிதி முகாமைத்துவத்தினைச் சிறந்த கட்டுப்பாட்டுடன் மேற்கொள்ளுவதற்கு முகாமைத்துவம் செயல்பட வேண்டும். |

ரூபா. 8,104,343 ,000 தொகையான கோரி இருந்த கட்டுநிதியில் 48 சதவீதம் மட்டுமே ஆகும். அதே போன்று ஆண்டில் கிடைத்திருந்த கட்டுநிதியிலும் 2023 ஒக்டோபர் 01 ஆம் திகதி வரையில் கிடைத்திருந்த கட்டு நிதி ரூபா. 3,184,709,000 ஆக இருந்ததுடன் அது வருடத்தில் கிடைத்த கட்டு நிதியில் 39 சதவீதம் மட்டுமாக இருந்ததுடன் மொத்த கட்டுநிதியில் 26 சதவீதமான ரூபா. 2,113,744,000 ஆன தொகை கிடைத்திருந்தது 2023 திசெம்பர் மாதத்தினுள் ஆகும். அதற்கு அமைய திணைக்களத்தின் கட்டுநிதி முகாமைத்துவம் திட்டமிட்ட வகையில் இடம்பெற்றிருந்தது என்பதனை அவதானிக்க முடியவில்லை.

திறைசேரியின் மூலம் குறித்த வகையில் முறையாக கட்டுநிதியினை வழங்க முடியாமை 2023 ஆம் ஆண்டில் முதலாம் காலாண்டுக்கான ஊக்கக் கொடுப்பனவிற்கான கட்டுநிதி திசெம்பர் மாதத்தில் கிடைத்தமை மற்றும் கணக்கினைத் தீர்க்கும் போது வருட இறுதியில் அதிக அளவில் கட்டு நிதியினை விடுவித்தமை போன்ற காரணங்களினால் ஏற்பட்டிருந்த நிலைமை என்பது.

**2.2. வருமான முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| நிதிப்பிரமாணத்தின் 128(2)(இ) பந்தியின் பிரகாரம் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தினால் அரை வருட நிலுவை வரி அறிக்கை முறையே ஜுலை 31 மற்றும் அடுத்த நிதியாண்டின் ஜனவரி 31 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளருக்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். ஆதற்கமைய, 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்காக 2024 பெப்ரவரி 28 ஆம் திகதியிடப்பட்டு சமர்ப்பிக்கப்பட்ட Legacy நிலுவை வரி வருமானம் தொடர்பான அறிக்கை மற்றும் RAMIS நிலுவை வரி வருமானம் தொடர்பான அறிக்கை என்பன மூலம் வழங்கப்பட்ட தகவல் பரீட்சிப்பில் அவதானிக்கப்பட்ட காரணிகள் பின்வருமாறு ஆகும். | | |

| | | | |
|---|---|---|---|
| **2.2.1** | நிலுவை வரி அறிக்கைக்கு அமைய, RAMIS மற்றும் Legacy கணினி ஒழுங்கு அமைப்புகளுக்கு உரியதான 2023 திசெம்பர் 31 ஆம் திகதி திணைக்களத்தினால் சேகரிக்கப்பட வேண்டிய மொத்த நிலுவை வரி, தண்டம் மற்றும் வட்டி வருமானத்தில் அறவிடப்படுவதற்கு உள்ள திறன் அடிப்படையில் அறவிடப்படக்கூடிய மற்றும் அறவீடு தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளது என வகைப்படுத்தப்பட்டிருந்ததுடன் அதற்கு அமைய, மொத்த நிலுவை வரி, தண்டம் மற்றும் வட்டி வருமானத்தில் 82 சதவீதத்திற்கும் அதிக பெறுமதி தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்ட வரி, தண்டம் மற்றும் வட்டியாக இனம் காணப்பட்டிருந்தது. | நிலுவை வரி அறவிடுதல், இடை நிறுத்துதல் என்பவற்றுக்கான இனம் காணப்பட்ட செல்லுபடியாகும் காரணங்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டிருந்தது டன் இடை நிறுத்துவதற்கு காரணமான விடயங்களைத் தீர்த்துக் கொண்டதன் பின்னர் நிலுவை வரியினை அறவிடுதல் மேற்கொள்ளப்படும். | உரிய வரி சட்டங்களில் காணப்படும் அனைத்து அறவீட்டு வழிமுறைகளிலும் செயல்பட்டு அனைத்து நிலுவை வரி மற்றும் தண்ட மீதிகளை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **2.2.2.** | அதற்கமைய, RAMIS கணினி ஒழுங்கமைப்பிற்கு உரியதாக, 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் மொத்த நிலுவை வரி, தண்டம் மற்றும் வட்டி பெறுமதியான ரூபா. 856,852,673,726 இல் 84 சதவீதம் அதாவது, ரூபா. 718,383,567,358 ஐ அறவிடுதல் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்ட வரி, தண்டம் மற்றும் வட்டி எனவும், ரூபா. 138,469,106,368 அதாவது 16 சதவீதம் அளவிடப்படக்கூடிய நிலுவை வரி மற்றும் தண்டம் எனவும் இனம் காணப்பட்டிருந்தது. | - மேற்படி - | உரிய வரி சட்டங்களில் காணப்படும் அனைத்து அறவீட்டு வழிமுறைகளிலும் செயல்பட்டு அனைத்து நிலுவை வரி மற்றும் தண்ட மீதிகளை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **2.2.3.** | Legacy கணனி ஒழுங்கமைப்பிற்கு அமைய, 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் மொத்த நிலுவை வரி, தண்டம் மற்றும் வட்டி வருமானமான ரூபா. 209,936,351,219 இல் ரூபா. 159,645,625,333 அதாவது , 76 சதவீதமானது அறவீடு தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்ட வரி, தண்டம் மற்றும் வட்டி என இனம் காணப்பட்டிருந்தது. அதற்கமையம், மொத்த நிலுவை வரி, தண்டம் மற்றும் வட்டி | - மேற்படி - | உரிய வரி சட்டங்களில் காணப்படும் அனைத்து அறவீட்டு வழிமுறைகளிலும் செயல்பட்டு அனைத்து நிலுவை வரி மற்றும் தண்ட மீதிகளை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வருமானத்தில் கவனத்தில் கொள்ள தக்க அளவு அதிக பெருமதி தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்ட வரி, தண்டம் மற்றும் வட்டியாக காணப்படுகின்றது என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | | |
| **2.2.4.** | 2014 இன் 14 ஆம் இலக்க சட்டத்தின் திருத்தப்பட்ட 2010 இன் 16 ஆம் இலக்க புறக்கணிக்கப்பட்ட வரி அறவிடுதல் (விசேட ஒழுங்கு விதிகள்) சட்டத்தின் கீழ் 2009 திசெம்பர் 31 ஆம் திகதியில் கொடுப்பனவு புறக்கணிக்கப்பட்ட வரிகளுக்காகத் தாபிக்கப்பட்ட DTRU பிரிவிற்கு 2015 திசெம்பர் 31 ஆம் திகதி ரூபா. 48,812,991,690 நிலுவை வரி மற்றும் தண்டமாக மாற்றப்பட்டுள்ளதுடன் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் ரூபா. 22,072,303,229 வரையில் அதாவது, ரூபா. 26,740,688,461 ஆன நிலுவை வரி மற்றும் தண்டப் பணம் மட்டும் தீர்க்கப்பட்டிருந்தது.<br><br>மேலும் நிலுவை வரி அறவீட்டினுள் உண்மையாகப் பணமாக அறவிடப்பட்ட தொகை 18 சதவீதமாக இருந்ததுடன் திருத்தப்பட்டவை மற்றும் நிதிச் சட்டத்தின் கீழ் நீக்கப்பட்டவை 82 சதவீதம் என்பது அவதானிக்கப்பட்டது. | 2023 ஆம் ஆண்டில் DRTU பிரிவில் நிலுவை வரி குறைவடைதல் - பணமாக மற்றும் வேறு முறைகள் தொடர்பான பொழிப்புகள் மூலம் சமர்ப்பிக்கப்பட்டு கணக்காய்விற்கு விடயங்கள் தெரிவிக்கப்பட்டு இருந்தன. | உரிய வரி சட்டங்களில் காணப்படும் அனைத்து அறவீட்டு வழிமுறைகளிலும் செயல்பட்டு அனைத்து நிலுவை வரி மற்றும் தண்ட மீதிகளை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **2.2.5.** | 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான வருமானக் கூற்றுக்கு அமைய பொருளாதார சேவைக் கட்டணம், தேசிய பாதுகாப்பு வரி சேவை, புரள்வு வரி, கடன் மீளச் செலுத்தும் வரி மற்றும் சுயமாக வெளிப்படுத்தல் மீதான வரி என்பவற்றுக்கு உரிய சேகரிப்பு மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான கூற்றுக்கு அமைய அறவிடப்பட்ட நிலுவை வருமானம் சமமாக இருக்க வேண்டிய போதிலும், அவற்றுக்கிடையே ரூபா. 2,454,770,780 வித்தியாசம் | ஒவ்வொரு பிரிவுகளுக்கும் இடையே, கோவைகள் மாற்றப்படுவதனால் இது தொடர்பான விரிவான விபரத்தினைப் பெற்றுக் கொள்வதற்கு கடினமாக உள்ளதுடன் எதிர்காலத்தில் அவ்வாறான குறைபாடுகள் ஏற்படா வண்ணம் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | உரிய வரி சட்டங்களில் காணப்படும் அனைத்து அறவீட்டு வழிமுறைகளிலும் செயல்பட்டு அனைத்து நிலுவை வரி மற்றும் தண்ட மீதிகளை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் சரியாக கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அவதானிக்கப்பட்டது. | | |
| **2.2.6.** | 2023 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிலுவை வருமானம் தொடர்பான கூற்றுக்கு அமைய எதுவித அறவீடும் இல்லாது 10.02.07.00 முத்திரை வரி வருமான தலைப்பின் கீழ் ரூபா. 14,599,086 உம் மற்றும் 10.02.08.00 செலவு வரி வருமான தலைப்பின் கீழ் ரூபா. 2,215,581,368 உம் ஆன மீதியும் 2019 ஆம் ஆண்டு தொடக்கம் காணப்படுகின்றது என்பது அவதானிக்கப்பட்டது. | இந்த நிலுவை வருமான வரி தொடர்பில் தற்போது வழக்கு விசாரிக்கப்பட்டு வருகின்றது என்பது. | உரிய வரி சட்டங்களில் காணப்படும் அனைத்து அறவீட்டு வழிமுறைகளிலும் செயல்பட்டு அனைத்து நிலுவை வரி மற்றும் தண்ட மீதிகளை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **2.2.7.** | 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிலுவை வருமானம் தொடர்பான கூற்றுக்கு அமைய 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் கடன் மீளச் செலுத்தும் வரி ரூபா. 1,692,235,124 மற்றும் வட்டி வருமான நிலுவை வரி மீதியான ரூபா. 6,016,947,091 முன்னைய வருடத்துடன் ஒப்பிடும்போது அதிகரித்திருந்ததுடன் ஆண்டினுள் எதுவித அறவீடும் இடம்பெற்றிருக்காததுடன் அதன் வட்டி வருமான தலைப்பின் கீழும் முன்னைய வருடத்திலும் எந்தவித அறவீடும் இல்லாத போதிலும் பாரிய அளவிலான (சுமார் 37 சதவீதம்) நிலுவை வரி நீக்கல் 2022 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பது அவதானிக்கப்பட்டது. | இதற்கு அமைய நிலுவை வரிகளில் அதிகரிப்பொன்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டினுள் ரூபா. 530,235,731.82 ஆன பெறுமதியினைக் கொண்ட மதிப்பீடு வழங்கப்பட்டிருந்தது என்பதனால் ஆகும். | உரிய வரி சட்டங்களில் காணப்படும் அனைத்து அறவீட்டு வழிமுறைகளிலும் செயல்பட்டு அனைத்து நிலுவை வரி மற்றும் தண்ட மீதிகளை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **2.2.8.** | உள்நாட்டு இறைவரி திணைக்களத்தில் 2023 ஆம் ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட வருமான மதிப்பீடு மற்றும் திருத்தப்பட்ட வருமான மதிப்பீட்டினைப் பரீட்சிப்பு செய்த போது வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு ஆகும். | | |
| (i) | 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்களுள் காட்டப்பட்டிருந்த வகையில், 2023 ஆம் ஆண்டுக்கு உரியதான நிதி வருமான மதிப்பீடு | ஆரம்ப மதிப்பீடு தயாரிப்பதற்கு நிதிக் கொள்கை திணைக்களத்தினால் 2023 ஆம் ஆண்டில் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தினைச் சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா. 2,090,013,000,000 ஆக இருந்ததுடன் 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் உண்மையாக ஈட்டப்பட்ட வருமானம் ரூபா. 1,832,274,445,785 ஆக இருந்ததனால் அந்த பெறுமதி மற்றும் ஆரம்ப வருமான மதிப்பீட்டின் சதவீதமாக 12 சதவீத வீழ்ச்சி ஆகும். எவ்வாறு இருப்பினும் அந்த ஆரம்ப வருமான மதிப்பீடு 2023 திசெம்பர் 18 ஆம் திகதி வழங்கப்பட்டிருந்த திருத்தப்பட்ட மதிப்பீட்டிற்கு அமைய ரூபா. 328,029,000,000 இனால் குறைக்கப்பட்டு அது ரூபா. 1,761,984,000,000 என வருடம் முடிவடைவதற்கு 13 நாட்கள் இருக்கையில் திருத்தப்பட்டிருந்தது. அந்த மாறுபாடு ஆரம்ப வருமான மதிப்பீட்டின் சதவீதமாக 15.7 சதவீதத்தினால் குறைந்த பெறுமதியைக் கொண்டிருந்தது. | அமுல்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த வரி வகைகள் மற்றும் கொள்கை ரீதியான மாற்றங்களை அடிப்படையாகக் கொண்டிருந்ததுடன் 2023 ஆம் ஆண்டுக்கு உரியதான திருத்தப்பட்ட மதிப்பீடு அரச நிதிக் கொள்கை திணைக்களத்தின் மூலமே தயாரிக்கப்பட்டு அந்த திருத்தம் நிதி அமைச்சின் மூலம் 2023 திசெம்பர் 14 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அந்த திருத்தம் நிதி அமைச்சின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதற்கு அடிப்படையான விடயங்கள் தொடர்பில் இந்த திணைக்களத்துக்குக் கூறுவதற்கு முடியாது என்பது. | |
| (ii) | உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கான செயலாற்றுகையை அளவிடுவதற்கு ஈடுபடுத்தப்பட்ட முக்கிய அளவீட்டு அலகான வருமான இலக்கினை எட்டும் செயலாற்றுகை அளவீடு, இவ்வாறு ஆண்டு நிறைவடைவதற்கு 13 நாட்கள் இருக்கையில் வருமான மதிப்பீடு 15.7 சதவீதத்தினால் குறைத்தல் மற்றும் அவ்வாறு குறைக்கப்பட்ட திருத்தப்பட்ட வருமான மதிப்பீடு மற்றும் 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் இருந்த உண்மையான வருமானத்துடன் ஒப்பிடப்பட்டு வருமான இலக்கினை எட்டுதல் 100 சதவீதத்தினை விஞ்சி எட்டப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டு இருந்ததன் மூலம் இந்த மதிப்பீடு தயாரிப்பதற்கான தகவல்களை வழங்கியதில் இருந்து மதிப்பீடு செய்யப்பட்ட இலக்கினை எட்டுதல் வரையில் | 2023 ஆம் ஆண்டுக்கு உரியதான திருத்தப்பட்ட மதிப்பீடு அரச நிதிக் கொள்கைத் திணைக்களத்தின் மூலம் தயாரிக்கப்பட்டு அந்த திருத்தம் நிதி அமைச்சின் மூலம் 2023 திசெம்பர் 14 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஆரம்ப மதிப்பீடு தயாரித்தல் மற்றும் திருத்தப்பட்ட மதிப்பீடு தயாரித்தல் என்பன நிதி அமைச்சின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதற்கு அமைய வருமானம் சேகரிக்கும் செயல்பாடு திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் திருத்தப்பட்ட மதிப்பீட்டுடன் | வருடாந்த வருமான இலக்கினைச் சரியாக நிலைப்படுத்தல் மற்றும் அவற்றை எட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அமைக்கப்பட்டிருந்த வழிமுறைகள் தொடர்பில் கணக்காய்வின் போது திருப்தியடைய முடியவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | ஒப்பிடும்போது திணைக்களம் 104 சதவீதத்தினால் வருமான இலக்கினை எட்டி இருந்தது என்பது. | |
| (iii) | ஆரம்ப வருமான மதிப்பீட்டினுள் எதிர்பார்க்கப்பட்ட நேரடி வரி வருமானம் 44 சதவீதம் மற்றும் மறைமுக வரி வருமானம் 56 சதவீதமும், திருத்தப்பட்ட மதிப்பீட்டின் மூலம் அந்த பெறுமதி முறையே 49 சதவீதம் மற்றும் 51 சதவீதமும் உண்மையான வருமான சேகரிப்பிற்கு அமைய அந்தப் பெறுமதிகள் 50:50 சதவீதமாக இருந்ததுடன் அரச வரிமுறைமை மிகவும் நியாயமானதும் மற்றும் நீதியானதுமாக இருக்க வேண்டுமாயின் நேரடி மற்றும் மறைமுக வரிகளின் கலவை மிகவும் ஒழுங்கான கலவையாக 60:40 மட்டத்தினை எட்டும் நோக்கில் இலங்கையின் கொள்கை உருவாக்கம் இலக்காகக் கொள்ளப்பட்டுள்ளதுடன் அரச வருமான வரி சேகரிப்பாளராக உள்நாட்டு இறைவரி திணைக்களம் அந்த வரி கலவையினை எட்டுவதற்காக இன்னமும் செயல்பட வேண்டி உள்ளது. | நாட்டில் உள்ள வரிக் கொள்கையினை அடிப்படையாகக் கொண்டு வருடாந்த வருமான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு அனுப்புவது நிதி அமைச்சினால் ஆகும் என்பது. | இலங்கையில் கொள்கை வகுப்பாளர்களின் இலக்குகளை எட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (iv) | நிதிக்கூற்றுகளில் மதிப்பீடுகள் மற்றும் உண்மையான வருமானங்கள் இடையே உள்ள மாற்றங்களுக்குரிய காரணங்களைத் தெரிவிக்கும் போது 2023 திருத்தப்பட்ட மதிப்பீடு நிதி அமைச்சில் அரச நிதிக் கொள்கைத் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டு 2023 திசெம்பர் 18 ஆம் திகதி வழங்கப்பட்டுள்ளது என மட்டுமே குறிப்பிடப்பட்டிருந்ததுடன் மாற்றங்களுக்கு நிதிப் பிரமாணம் 85 இன் பிரகாரம் நிதிக் கூற்றுகளில் மாற்றத்திற்கு உரிய காரணம் அல்லது வருமானத் திருத்தத்தின் அடிப்படை என்பன குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | மதிப்பீடு மற்றும் உண்மையான வருமானம் இன்பவற்றுக்கிடையே வேறுபாடுகள் காட்டப்படும் போது மாற்றத்திற்கு உரிய காரணம் அல்லது வருமான திருத்தம் செய்தலுக்கான அடிப்படை என்பன திணைக்களத்தினால் கூற முடியாது என்பதுடன் திணைக்களத்தினால் சேகரிக்கப்படும் வருமானம் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ள திருத்தப்பட்ட வருமான மதிப்பீட்டுடன் ஒப்பிட்டு | வருடாந்த வருமான இலக்கினைச் சரியாக நிலைப்படுத்தல் மற்றும் அவற்றை எட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | வருமான இலக்கினை எட்டுதல் தொடர்பான வீதம் சுட்டிக்காட்டப்படும் என்பது. | |

2.3. **செலவின முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| 2.3.1. | நிதியேற்பாட்டின் குறை பயன்பாடு | | |
| | 2023 ஜனவரி 27 ஆம் திகதி இடப்பட்ட, அரச வரவு செலவு சுற்றறிக்கை இலக்கம் 1/2023 இல், ஒதுக்கப்பட்ட நிதிகளில் 6 சதவீதம் நீக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும், சுற்றறிக்கைக்கு முரணாக 5 செலவு விடயங்களுக்கு உரிய மீண்டெழும் செலவுகளுக்காக நிதிப் பிரமாணம் 66 இன் கீழும் நிதி ஏற்பாடு செய்யப்பட்டு செலவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அவ்வாறு நிதி ஒதுக்கப்பட்ட 3 செலவு விடயங்களுக்கான மீதிகள் 9 சதவீதத்திற்கும் 25 சதவீதத்திற்கும் இடைப்பட்ட தொகையாக இருந்ததுடன், அந்த ஒதுக்கப்பட்ட நிதி, சரியாக பயன்படுத்தப்படாததால் மேலதிக நிதி ஏற்படுத்துவதற்காக உள்ள சட்டவாக்க வசதிகள் சரியாகப் பயன்படுத்தப்படவில்லை என்பது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது, | பொருளாதார நெருக்கடி காரணமாக அவ்வப்போது வழங்கப்பட்ட சுற்றறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளின் பிரகாரம் செலவு முகாமைத்துவம் செய்யப்பட்டுள்ளதுடன், எதிர்காலத்தில் வழங்கப்படும் சுற்றறிக்கைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுப்பதற்கு உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது என்பது. | சுற்றறிக்கைகளுக்கு உட்பட்டு செலவு முகாமைத்துவப் படுத்தப்பட்டு மேற்கொள்ளப்பட வேண்டிய அத்தியாவசியமான பெறுகைகள் குறித்த காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டும். |

2.4. **பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை மேற்கொள்ளல்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| 2.4.1. | 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் நிதி கூற்றுக்கு அமைய கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகள் தொடர்பான கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள மீதியில் 2024 பெப்ரவரி 28 ஆம் திகதி | 2024 ஜூலை 16 ஆம் திகதியில் அந்த பொறுப்புகளில் மீதியாக இருந்தது ரூபா. 4,624,865 மட்டுமே என்பது. | தீர்க்கப்படாத பொறுப்புக்கள் துரிதமாகத் தீர்த்து முடிவுறுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வரையிலும் தீர்க்கப்படாத கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகளின் தொகை ரூபா. 17,688,924 ஆகும். அது 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் திணைக்களத்தின் தீர்க்கப்படாத பொறுப்புத் தொகையாகக் குறிப்பிடப்பட்டிருந்த மொத்த கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் தொகையின் 22 சதவீதம் என்பது அவதானிக்கப்பட்டது. | | |
| **2.4.2.** | திணைக்களத்தினால் நிதிக் கூற்றுகளில் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான கூற்றினை தயாரிக்கும் போது 2017 ஏப்ரல் 27 ஆம் திகதி இடப்பட்ட இலக்கம் 255/2017 கொண்ட அரச கணக்குகள் சுற்றறிக்கைக்கு அமைய நிதிப் பிரமாணம் 94 (2) மற்றும் (3) இன் பிரகாரம் பொறுப்புக்களுக்கு மேற்கொள்ளப்படும் கடப்பாடுகள் கூற்று தயாரிக்கப்பட்டிருந்ததுடன் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி கடப்பாடுகளின் பெறுமதி ரூபா. 230,581,411 ஆகும். அதனுள் உள்ளடக்கப்பட்டுள்ள நிதிப் பிரமாணம் 94(3) இற்கு அமைய மொத்த செலவு மதிப்பீட்டினை விஞ்சி ரூபா. 3,306,705 ஆன காலப் பகுதிக்குரிய கடப்பாடுகளுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்தது என்பது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | அத்தினத்தில் காணப்பட்ட வரிக் கொள்கைகள் மற்றும் விலைக் கேள்வி என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் வருட நடுப் பகுதியில் இடம்பெற்ற ஒரு சில சதவீதங்களின் தளம்பல் காரணமாக மாற்றமடைந்துள்ளது என்பதனால் 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் குறிப்பிடப்பட்டிருந்த மொத்த செலவு மதிப்பீட்டினை விஞ்சி கடப்பாடுகளுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்தது என்பது. இந்த அறிக்கையினை எதிர்காலத்தில் தயாரிக்கும் போது இவ்வாறான தவறுகள் இன்றி தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான கூற்றினைச் சரியாகத் தயாரித்தல் வேண்டும். |

## 2.5. கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஒழுங்கு விதிகளுக்கு அமைய கணக்கீட்டு உத்தியோகத்தரினால் கீழே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் உறுதிப்படுத்தல் மேற்கொள்ளப்பட வேண்டி இருந்த போதிலும், அதற்கு அமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|---|
| **2.5.1.** | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குத் தேவையான வகையில் தீர்மானிக்கப்பட்ட காலப் பகுதியினுள் அனைத்து | 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் அனுப்பப்பட்டிருந்த | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் |

| | | |
|---|---|---|
| கணக்காய்வு விசாரணைகளுக்கும் பதில் வழங்குதல் மேற்கொள்ளப்படுகின்றது என்பதனைப் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் உறுதிப்படுத்தப்பட வேண்டிய போதிலும், அறிக்கையின் 3.5 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காய்வு விசாரணைகளுக்குக் குறித்த காலத்தினுள் பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | விசாரணைகளிடையே கணக்காய்வு விசாரணைகள் 04 இற்கு மட்டுமே பதில் வழங்கப்படவில்லை என்பதும் அந்த விசாரணைகளுக்குத் தேவையான தகவல்கள் பிரிவுகளிடம் இருந்து சேகரித்தல் மற்றும் பரீட்சிப்பு செய்வதற்குப் போதியளவு காலம் தேவையாக உள்ளது என்பதனால் அந்த 04 விசாரணைகளுக்கும் பதில் வழங்குதல் தாமதம் அடைந்துள்ளது என்பது. | பிரிவின் (உ) பிரகாரம் கணக்காய்வு விசாரணைகளுக்கு குறித்த காலத்தினுள் பதில் வழங்கப்படுதல் வேண்டும். |

## 2.6. சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

மாதிரிக் கணக்காய்வு பரீட்சிப்புகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஒழுங்கு விதிகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

| | அவதானிப்பு | | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு** | **பெறுமதி** | **இணங்காமை** | | |
| 2.6.1. | **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவை** | | | | |
| (i) | XXIV அத்தியாயத்தின் 4.4 ஆம் பிரிவு | ரூபா. 476,795 | 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் மரணமடைந்த மூன்று உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய மீதி குறித்த சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு இதுவரையில் | ரூபா.222,500 ஆன தொகையை மரணப் பணிக்கொடையிலிருந்து அறவிடுவதற்கும் ரூபா. 62,781 ஆன தொகைக்கு திறைசேரி 79 வழங்கப்பட்டுள்ளதுடன் ரூபா. 191,514 ஆன தொகையை அக்ரஹார காப்புறுதியின் மூலம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரப்பட்டுள்ளது என்பது. | தாபன விதிக்கோவைக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்பட்டு குறித்த கடன் மீதி விரைவில் தீர்க்கப்படுதல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | அறவிடப்பட்டிருக்க வில்லை. | | |
| (ii) | XXIV அத்தியாயத்தின் 4.2.2, 4.2.4, 4.2.5, 4.5, 4.6, மற்றும் 6.3 ஆம் பிரிவுகள் | ரூபா. 267,960 | ஓய்வு பெற்றுச்சென்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதி விரைவில் தீர்க்கப்பட வேண்டிய போதிலும், 3 உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய கடன் மீதி 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் தீர்க்கப்படாது காணப்பட்டது. | இரண்டு உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா. 203,690 இற்கு உரிய தொகையை எதிர்காலத்தில் ஓய்வூதியப் பணிக்கொடையிலிருந்து அறவிடக்கூடியதாக உள்ளது என்பதும் மற்றும் ஏனைய உத்தியோகத்தரிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா. 64,270 ஆன தொகைக்கு திறைசேரி 79 வழங்கப்பட்டுள்ளது என்பது. | தாபன விதிக்கோவைக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்பட்டு குறித்த கடன் மீதி விரைவில் தீர்க்கப்படுதல் வேண்டும். |
| (iii) | XXIV அத்தியாயத்தின் 4.5 மற்றும் 4.6 ஆம் பிரிவுகள் | ரூபா. 1,953,258 | 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் சேவையைக் கைவிட்டுச் சென்ற 13 உத்தியோகத்தர்களின் கடன் மீதி அறவிடப்படாது காணப்பட்டது. | மூன்று உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா. 520,892 ஆன தொகையை அறவிடுவதற்கு உரிய சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் மீதி 10 உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா. 1,432,366 ஆன தொகையை அறவிடுவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்பது. | தாபன விதிக்கோவைக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்பட்டு குறித்த கடன் மீதி விரைவில் தீர்க்கப்படுதல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயல்திட்டத்தினை நிறைவேற்றுவதில் தாமதம்

கீழே குறிப்பிடப்பட்ட அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| **3.1.1.** உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் RAMIS ஒழுங்கமைப்பின் செயலாற்றுகை | | |

பரீட்சிப்பு

RAMIS ஒழுங்கமைப்பிற்கு 2014 ஆம் ஆண்டு தொடக்கம் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் ரூபா. 14,429,237,244 ஆன மொத்த செலவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. RAMIS 1.0 இற்காக 2014 மே 27 ஆம் திகதி 35,006,646 சிங்கப்பூர் டொலருக்கு (காணப்பட்ட அந்நிய செலாவணிக்கு அமைய ரூபா. 04 பில்லியன் தொகைக்கு) சிங்கப்பூர் நிறுவனம் ஒன்றுடன் (NSC) உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் அந்த ஒழுங்கமைப்பின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த மொடியூல் 2016 ஜனவரி 01 ஆம் திகதி தொடக்கம் செயல்படுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பான பரீட்சிப் பின் போது அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு ஆகும்.

| | | | |
|---|---|---|---|
| (i) | திணைக்களத்தினால் 2016 ஜனவரி மாதம் தொடக்கம் 2020 ஒக்டோபர் வரையான 04 வருடத்தில் ஒழுங்கமைப்பின் பராமரிப்பு சேவை நடவடிக்கைகளுக்காக சிங்கப்பூர் டொலர். 5,880,313 (ரூபா.725,882,619) மொத்த செலவும் மீண்டும் 2021 ஜனவரி 31 வரையான 03 மாதத்தில் ஒப்பந்த உடன்படிக்கையை நீடிப்பதற்காக சிங்கப்பூர் டொலர். 309,824 உம் (ரூபா.46,826,053) செலவிடப்பட்டிருந்ததுடன் 2021 பெப்ரவரி 01 ஆம் திகதி தொடக்கம் 2024 ஜனவரி 31 ஆம் திகதி வரையான 03 வருட காலத்திற்கு சிங்கப்பூர் டொலர். 21,053,371 இற்கு (சுமார் ரூபா. 3.1 பில்லியன்) பராமரிப்பு சேவை ஒப்பந்தம் சிங்கப்பூர் ஒத்துழைப்பு நிறுவனத்தின் துணை ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டிருந்தது. 2024 ஜனவரி வரையில் ஒழுங்கமைப்பினைக் கையேற்பதற்கான பதவியணியினரை ஆட்சேர்ப்பு செய்வதில் தாமதம் ஏற்பட்ட காரணத்தால் மேலும் 03 | உள்நாட்டு இறைவறி திணைக்களத்தின் RAMIS ஒழுங்கமைப்பினைப் பராமரிப்பதற்கான ஒப்பந்தத்தை 2024 பெப்ரவரி தொடக்கம் 2027 ஜனவரி வரையான 3 வருட காலத்தினால் நீடிப்பதற்கான அமைச்சரவை அனுமதி 2024 ஏப்ரல் 29 ஆம் திகதி வழங்கப்பட்டிருந்தது என்பது. | RAMIS ஒழுங்கமைப்பின் பராமரிப்பு நடவடிக்கைகளத் திணைக்களத்தினால் கையேற்பதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும் |

வருட காலத்திற்கு உடன்படிக்கையை நீடிப்பதற்கான அமைச்சரவை அனுமதி 2024 ஏப்ரல் 29ஆம் திகதி வழங்கப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா. 07 பில்லியன் செலவினை ஏற்க நேரிட்டிருந்தது.

(ii) 2017 இன் 24 ஆம் இலக்க புதிய உள்நாட்டு இறைவரி சட்டத்தினை நடைமுறைப்படுத்துவதுடன் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்களுக்காக சிங்கப்பூர் நிறுவனத்திற்கு 02 செயற்திட்டங்களின் கீழ் அந்த நடவடிக்கைகள் ஒப்படைக்கப்பட்டிருந்தன. அதற்கமைய வரி அறிக்கை வழங்குதல் மற்றும் சேகரித்தல் மற்றும் இ சேவைகளை மேற்கொள்ளுதல் ஆகிய செயல்பாடுகளை உள்ளடக்கி RAMIS 2.0 கட்டம் A சிங்கப்பூர் டொலர். 1,760,000 இற்கு (சுமார் ரூபா. 265 மில்லியன்) உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன், மூலதன இலாப வரி மற்றும் வருமான வரிக்காக சுய மதிப்பீட்டு அறிக்கைகளுக்குரிய நடவடிக்கைகள், சுற்றுலா VAT வரி மீள செலுத்துதல் தொடர்பான நடவடிக்கைகள், புதிய வரி செலுத்துபவர்களை பதிவு செய்தல், வரி அறிக்கைகளை வழங்குதல் மற்றும் பெற்றுக் கொள்ளுதல், வரி கொடுப்பனவினைப் பெற்றுக் கொள்ளுதல் மற்றும் சேகரித்தல், மதிப்பீடுகளை வழங்குதல், வரி மேன் முறையீடுகளை பெற்றுக் கொள்ளுதல் மற்றும் தயாரித்தல், வரி மீளச் செலுத்தல் வழங்குதல், அனுமதி சான்றிதழ்களை வழங்குதல், உள்நாட்டு இறைவரி திணைக்களம் மற்றும் ஏனைய தொடர்புடைய நிறுவனங்களுடன் இடை முகங்களை (Interface) வழங்குதல் மற்றும் இணையதளத்தின் ஊடாக தொடர்பு கொள்ளுதல் போன்ற செயல்பாடுகளுக்காக 2.0 கட்டம் B

| | | | |
|---|---|---|---|
| | இல் சிங்கப்பூர் டொலர். 15,534,364 (சுமார் ரூபா. 2.3 பில்லியன்) இற்கு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (அ) | RAMIS ஒழுங்கமைப்பு செயல்படும் போது ஏற்படும் சிக்கல்களுக்காக RAMIS ஒழுங்கமைப்பில் ஒரு சில மாற்றங்கள் செய்யப்படுகின்றன எனவும், இதற்காக சிங்கப்பூர் நிறுவனத்திற்கு அந்த மாற்றங்களை மேற்கொள்ளுவதற்கு செலவிடப்படும் மனித நாட்களுக்காக சிங்கப்பூர் டொலர். 1,333 அதாவது அண்ணளவாக ரூபா.291,000 செலவாகும் எனவும், அந்தத் தொகையினைப் புதிய உடன்படிக்கையின் கீழ் சிங்கப்பூர் டொலர் 1,400 அண்ணளவாக ரூபா. 305,200 என அதிகரிக்கப்பட்டு இருந்ததுடன் அதற்கு அமைய அந்த நிறுவனத்திற்கு மொடியூலை அபிவிருத்தி செய்வதற்கு செலுத்தும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள மொத்த செலவிற்கு மேலதிகமாக, இவ்வாறு மேற்கொள்ளப்பட்ட மாற்றத்திற்காக 2022 ஆம் ஆண்டில் அவ்வப்போது ரூபா. 71,723,662 செலுத்தப்பட்டிருந்தது என்பது மாதிரிக் கணக்காய்வுப் பரீட்சிப் பின் போது அவதானிக்கப்பட்டது. | RAMIS ஒழுங்கமைப்பு தொடர்பான மொடியூலை வரிக் கொள்கைகளில் மேற்கொள்ளப்படும் மாற்றங்களுக்கு நேரொத்ததாக இற்றைப்படுத்தப்படுதல் மேற்கொள்ளப்பட வேண்டியது பொதுவானது என்பதும் இந்த வரிக் கொள்கை மாற்றம் தொடர்பில் முன்னரே தேவைப்பாடுகளைப் பெற்றுக் கொள்ளுதல் கடினமானது என்பதும் ஒழுங்கமைப்பினை அபிவிருத்தி செய்யும் சந்தர்ப்பத்தில் அதற்கான வசதிகளை ஏற்படுத்துதல் முடியாது என்பதும். | அரசாங்கத்திற்கு ஆகக் குறைந்த செலவு ஏற்படும் வகையில் சிறந்த புரிந்துணர்வுடன் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் ஒழுங்கமைப்பு பராமரிப்பினைக் கையேற்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (ஆ) | RAMIS 2.0 இன் கீழ், மதிப்பீட்டு அறிக்கை வழங்கும் மொடியூல் அபிவிருத்தி செய்யப்படாத காரணத்தால் 2022 மே 31 ஆம் திகதி கால வரம்பிற்கு உட்பட்டு 2018/2019 மதிப்பீட்டு ஆண்டுக்கு உரியதான மேலதிக வருமான வரி மதிப்பீட்டு அறிக்கையை RAMIS ஒழுங்கமைப்பினுள் உள்ளடக்குவதற்கான வழிகாட்டல் 2024 ஏப்ரல் 10 ஆம் திகதி வழங்கப்பட்டிருந்ததுடன் அதற்கு அமைய 2018/2019 ஆம் ஆண்டுக்கான RAMIS ஒழுங்கமைப்பில் உள்ளடக்கப்பட வேண்டிய மதிப்பீட்டு அறிக்கைகளின் | மாற்று ஒழுங்கமைப்பின் மூலம் தற்போது வழங்கப்படுகின்ற மதிப்பீட்டு அறிக்கைகள் RAMIS ஒழுங்கமைப்புடன் இற்றைப்படுத்துதல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பது. | RAMIS 2.0 மொடியூலை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகளை விரைவில் பூர்த்தி செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | எண்ணிக்கை 2,979 என வழங்கப்பட்டிருந்த தகவல்களின் அடிப்படையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், ஒழுங்கமைப்பில் அந்த ஆண்டிற்கான மொடியூல் மட்டும் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததாலும் 2019/2020 ஆம் ஆண்டு தொடக்கம் 2021/2022 ஆம் ஆண்டு வரையில் முறையே 4,489 உம், 3,460 உம் மற்றும் 758 உம் அறிக்கைகளை ஒழுங்கமைப்பினுள் உள்ளடக்குவதற்கு அந்த ஒவ்வொரு மதிப்பீட்டு வருடத்திற்கும் உரிய மதிப்பீட்டு மொடியூல் அபிவிருத்தி செய்யப்படாததன் அடிப்படையில் RAMIS ஒழுங்கமைப்பிலிருந்து புறம்பான தற்காலிக ஒழுங்கமைப்பொன்று காணப்படுகின்றது என மேலும் அவதானிக்கப்பட்டது. இதனைக் காரணமாகக் கொண்டு ஒழுங்கமைப்பின் ஊடாக உத்தியோகத்தர்களுக்கு வேலை உருப்படிகளை ஒப்படைப்பதற்கு முடியாதிருந்தது என்பதும் அவதானிக்கப்பட்டது. | | |
| (iii) | 28 நிறுவனங்களை RAMIS ஒழுங்கமைப்பில் இணைத்தலை 4 கட்டங்களின் கீழ் மேற்கொள்ளுவதற்கும் அதன் போது, தற்போது இலங்கை சுங்கம், மக்கள் வங்கி, இலங்கை வங்கி, நிதி அமைச்சு, நிறுவன பதிவாளர் திணைக்களம், லங்கா கிளியர் தனியார் நிறுவனம் ஆகிய 06 நிறுவனங்களும் இணைக்கப்பட்டிருந்த போதிலும், மீதி நிறுவனங்கள் பல்வேறு சிக்கல்கள் காணப்பட்ட காரணத்தால் இதுவரையில் இணைக்க முடியாதுள்ளது என்பது அவதானிக்கப்பட்டது. | தற்போது தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் பூர்த்தி செய்யப்பட்டு மக்கள் வங்கி, இலங்கை வங்கி, நிறுவன பதிவாளர் திணைக்களம், நிதி அமைச்சு, சுங்கத் திணைக்களம், லங்கா க்ளியர் தனியார் நிறுவனம் என்பன சுயுஆஐளு ஒழுங்கமைப்புடன் தற்போது இணைக்கப்பட்டுள்ளது என்பது. ஏனைய நிறுவனங்களை RAMIS ஒழுங்கமைப்புடன் இணைப்பதற்குத் தேவையான உட் கட்டமைப்பு வசதிகளைப் பூர்த்தி செய்து இருக்காததுடன் அது தொடர்பில் குறித்த நிறுவனங்கள் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது என்பது. உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு அப்பால் உள்ள காரணிகள் இதில் | தற்போதுள்ள சிக்கல்களைத் தீர்த்து இணைக்கப்படாத நிறுவனங்களை விரைவில் RAMIS ஒழுங்கமைப்பில் இணைக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது என்பது. | |
| (iv) | RAMIS ஒழுங்கமைப்பு தொடர்பாக மேலதிக கலந்துரையாடலுக்கு 2024 ஜனவரி 24 ஆம் திகதி பாராளுமன்றத்தில் இடம் பெற்ற முறைமைகள் மற்றும் ஒழுங்குகள் தொடர்பான செயற்குழு தவணையின் போது மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகளில் உள்ளடக்கப்பட்டு இருந்ததன் பிரகாரம் வேறான சேவையின் கீழ் தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்து RAMIS ஒழுங்கமைப்பினைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பில் சாதகமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதற்கான தகவல்கள் கணக்காய்வில் பதிவிடப்பட்டிருக்காததுடன் RAMIS ஒழுங்கமைப்பினை கையேற்கும் போது ஆகக் குறைந்தது 50 கணினி தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் உள்நாட்டு இறைவரி திணைக்களத்தில் இருக்க வேண்டும் என அனுமானிக்கக் கூடியதாக உள்ளது எனவும் இந்தத் தொகை உடன்படிக்கைக்கு அமைய மாற்றமடையக் கூடும் எனவும், மேலும் தகவல்கள் முழுமையற்று கிடைக்கப் பெற்றிருந்ததனால் கணக்காய்வுக்கு உறுதிப்படுத்திக் கொள்ள முடியவில்லை எனவும் அவதானிக்கப்பட்டது. | RAMIS ஒழுங்கமைப்பினை பேணிச் செல்லுவதற்குத் தேவையான உத்தியோகத்தர் எண்ணிக்கை அவர்களது தகைமைகள் மற்றும் தேவையான அனுபவம் என்பவற்றைக் கொண்ட விரிவான பதிவேடு இதுவரையில் NCS நிறுவனத்தினால் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பது அதற்கு தேவையான ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் வன்பொருள் தேவைப்பாட்டினை உள்ளடக்கி RAMIS ஒழுங்கு அமைப்பினைக் கையேற்கும் விரிவான திட்டம் ஒன்றைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன், உரிய தரப்பினர்களுடன் கலந்துரையாடப்பட்டு அதற்குரிய நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்பது. | RAMIS ஒழுங்கமைப்பின் பராமரிப்பு நடவடிக்கைகளைக் கையேப்பதற்குத் தேவையான வழி வகைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (v) | RAMIS செயற்திட்டத்தின் விடயப் பரப்பிற்கு உரிய செயல்களை மேற்கொள்ளுவதற்கு உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் இருந்து 77 பேர் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் தற்காலிகமாக இணைக்கப்பட்டு இருந்த போதிலும் 2024 பெப்ரவரி 16 ஆம் திகதி | செயற்திட்ட பதவியணி 77 பேர் 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் சேவையில் ஈடுபட்டுள்ளதுடன், நிதி அமைச்சு செயலாளரின் இலக்கம் MF/02/17/IRD/33 கொண்டதும் 2024 மார்ச் 04 ஆம் திகதி இடப்பட்டதுமான கடிதத்தின் மூலம் அந்தப் | அரசாங்கத்திற்கு ஆகக் குறைந்த செலவு ஏற்படும் வகையில் செயற்திட்டத்தினைச் செயல்படுத்துதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். |

| | | | |
|---|---|---|---|
| | MFI/02/17/IRD/33 இலக்கம் கொண்ட நிதி, பொருளாதார நிலைத்தன்மை மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சினால் வழங்கப்பட்ட கடிதத்திற்கு அமைய 2024 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 60 வரையில் குறைக்கப்பட்டுள்ளது என்பது அவதானிக்கப்பட்டது. | பதவியணி 60 வரையில் வரையறுக்குமாறு தெரிவிக்கப்பட்டு இருந்தது என்பதும் அந்த பதவியணி தற்போதுள்ள நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்கு போதுமானது அல்ல என்பதும். | |
| (vi) | RAMIS ஒழுங்கமைப்பின் கீழ் சிங்கப்பூர் நிறுவனத்தின் மூலம் செயல்படுத்தப்பட்ட அழைப்பு மத்திய நிலைய சேவையை (Call Center) உள்நாட்டு இறைவரி திணைக்களத்தினால் கையகப்படுத்தப்பட்டு ஒரு வருடத்திற்கு ரூபா. 33,844,000 வட் அற்ற தொகையினை செலுத்துவதற்கு உட்பட்டு 2021 ஏப்ரல் 01 ஆம் திகதி தொடக்கம் 2023 மே 31 ஆம் திகதி வரையான 02 வருடத்திற்கும் அதிகமான காலத்திற்குத் தனியார் நிறுவனத்தின் கீழ் பேணிச் செல்லப்பட்டிருந்ததுடன் மீண்டும் 2023 ஜுன் 01 ஆம் திகதி தொடக்கம் 2025 மார்ச் 31 ஆம் திகதி வரையில் ஒரு வருடத்திற்கு ரூபா. 38,350,000 வட் அற்ற தொகைக்கு குறித்த ஒப்பந்தத்தை நீடிப்பதற்கு நிதி அமைச்சின் அனுமதி கிடைத்திருந்தது. இந்த அழைப்பு மத்திய நிலைய சேவையினைப் பேணிச் செல்வதற்குத் திணைக்களத்திடம் பௌதீக மற்றும் மனிதவளங்கள் இல்லாததன் அடிப்படையில் ஒப்பந்தத்தினை நீடிப்பதற்கு நேரிட்டிருந்ததுடன் இந்த அழைப்பு மத்திய நிலைய சேவைக்கு 2024 பெப்ரவரி 28 ஆம் திகதி வரையில் ரூபா. 96,450,500 தொகை செலுத்தப்பட்டுள்ளது என்பதும் இந்த சேவையை திணைக்களத்தினால் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காததனால் இந்த மேலதிக செலவினை ஏற்க நேரிட்டுள்ளது என்பதும் அவதானிக்கப்பட்டது. | உள்நாட்டு இறைவரி திணைக்களத்தில் பேணிச் செல்லப்பட்டு வரும் அழைப்பு மத்திய நிலைய சேவை விசேட சேவை என்பதால் குறித்த கட்டணத்தின் அடிப்படையில் தகைமையுடைய நிறுவனத்தின் மூலம் அந்த செயலினை நிறைவேற்றுதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பது. | அரசாங்கத்திற்கு ஆகக் குறைந்த செலவு ஏற்படும் வகையில் செயற்திட்டத்தினைச் செயல்படுத்துதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். |

## 3.32. வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

2020 ஒகஸ்ட் 28 நாம் திகதியிடப்பட்ட இலக்கம் 2/2020 கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையில் 10.2 ஆம் பந்தியின் பிரகாரம் அரச நிதி திணைக்களத்தினால் வழங்கப்பட்டிருந்த வழிகாட்டல் இலக்கம் 14 இல் குறிப்பிடப்பட்டிருந்த படிவத்தின் பிரகாரம் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை தயாரிக்கப்படுதல் வேண்டும். அது தொடர்பில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|---|
| **3.2.1.** | 2020 ஒகஸ்ட் 28 ஆம் திகதி இடப்பட்ட இலக்கம் 2/2020 கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையின் 10.2 ஆம் பந்தியின் பிரகாரம் அரச நிதித் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டல் இலக்கம் 14 இல் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்தின் பிரகாரம் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை 2024 பெப்ரவரி 28 ஆம் திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் அறிக்கையிடப்பட வேண்டிய போதிலும் 2024 மார்ச் 22 ஆம் திகதி காலதாமதத்துடன் ஒப்படைக்கப்பட்டிருந்தது. | பரிந்துரையின் பிரகாரம் எதிர்காலத்தில் குறித்த தினத்திற்கு முன்னர் சமர்ப்பிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது என்பது. | சுற்றறிக்கையின் ஒழுங்கு விதிகளின் பிரகாரம் குறித்த தினத்தில் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |

## 3.3. சொத்து முகாமைத்துவம்

கீழே குறிப்பிடப்பட்ட அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|---|
| **3.3.1.** | திணைக்களத்திடம் கணக்கீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா. 24,890,000 ஆன 7 வாகனங்கள் 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகள் தொடக்கம் செயல்பாடின்றி காணப்படுகின்றன என்பது அவதானிக்கப்பட்டது. | 2023 வாகன கணிப்பாய்வு அறிக்கைக்கு அமைய 42-7793 மற்றும் 52-8295 வாகனங்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன் ஏனைய 06 வாகனங்களும் திருத்த | வாகனங்கள் செயல்பாடின்றி காணப்படுவதற்கான காரணங்களைக் கண்டறிந்து விரைவில் உரிய நடவடிக்கைகள் |

| | | |
|---|---|---|
| அதற்கமைய நிதிக் கூற்றில் 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் வாகனங்கள் எனக் குறிப்பிடப்பட்டிருந்த ரூபா. 320,307,150 ஆன சொத்துக்களின் பெறுமதியினுள் மேலே செயல்பாட்டின்றி காணப்பட்ட வாகனங்களின் பெறுமதியும் உள்ளடங்கும். | வேலைகளுக்காக அனுப்பப்பட்டுள்ளதுடன் இந்த 08 வாகனங்களும் இன்னமும் திணைக்களத்திடம் காணப்படுகின்றன என்பதால் அவற்றின் பெறுமதி நிதிக் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளது என்பது. | எடுக்கப்படுதல் வேண்டும். |

### 3.4. நட்டங்கள் மற்றும் இழப்புகள்

கீழே குறிப்பிடப்பட்ட அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|---|
| **3.4.1.** | 05 சந்தர்ப்பங்களில் இடம்பெற்றிருந்த வாகனங்கள் மற்றும் கருவி விபத்துக்கள் தொடர்பில், ரூபா.8,851,886 ஆன தொகை நிதிப் பிரமாணம் 103 (1)(ஊ) மற்றும் (ஓ) பிரகாரம் பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவீடு அல்லது நீக்குதல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. ☐ | நட்டத்தினை மீள் நிரப்பல் மற்றும் இறுதி விசாரணைக் குழுவின் தீர்மானம் கிடைத்திருக்காததால் அறவீடு செய்யப்படவில்லை என்பது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவீடு அல்லது நீக்குதல் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |
| **3.4.2.** | 2019 ஆம் ஆண்டு தொடக்கம் 2023 திசெம்பர் 31ஆம் திகதி வரையில் இடம்பெற்றிருந்த 5 வாகன விபத்து தகவல்கள் தொடர்பில் நிதிப் பிரமாணம் 103(1)(உ) மற்றும் 104 (3) பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு, ஏற்பட்டிருந்த நட்டத்தின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு சேதம் மற்றும் நட்ட பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டு இருக்கவில்லை. அதே போன்று அந்த விபத்துக்கள் தொடர்பில் நட்டத்தில் பெறுமதி மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுகளில், ஏடுகளில் நீக்குதல் தொடர்பான கூற்றில் கட்டப்பட்டிருக்காத காரணத்தால் சரியான தகவல்கள் கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | வாகன விபத்து தொடர்பில் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் சேதம் மற்றும் நட்ட பதிவேட்டில் தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் சேதம் மற்றும் நட்ட பதிவேட்டினை ஒழுங்கான முறையில் இற்றைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் ஏற்பட்ட நட்டத்தின் பெறுமதி சேதம் மற்றும் நட்ட பதிவேடு மற்றும் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டும். |

**3.5. முகாமைத்துவ பலவீனங்கள்**

கீழே குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| **3.5.1.** | 2020/21 மற்றும் 2021/22 ஆண்டுகளில் கூட்டணிக்கப்பட்ட வருமான வரிக்காக (CIT) மதிப்பீட்டு அறிக்கை வழங்கும் செயல்முறை தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| **(i)** | 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி சட்டத்தின் 126 ஆம் பிரிவின் பிரகாரம் வரி செலுத்துவதற்கு உள்ள அனைத்து நபர்களினாலும் ஆணையாளர் நாயகத்தினால் தீர்மானமாக குறிப்பிடப்படும் ஏதேனும் படிவத்திற்கு அமைய குறிப்பிடப்பட்ட தகவல்களை உள்ளடக்கி வரி அறிக்கையொன்று எழுத்து மூலம் அல்லது மின்னியல் ஊடகத்தின் மூலம் குறித்த காலத்தினுள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும். மாதிரிப் பரீட்சிப்பின் போது குறிப்பிடப்பட்ட 22 வரி செலுத்துவோருக்கு வரி அறிக்கை படிவம் அனுப்பப்பட்டிருந்த போதிலும், அவர்களினால் 2020/21 மற்றும் 2021/22 ஆகிய ஆண்டுகளுக்காக குறிப்பிட்ட காலத்தினுள் அவ்வாறு வரி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | மேலே கூறப்பட்ட 22 வரி செலுத்துவோரிடையே 15 வரி செலுத்துவோரினால் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்காத ஆண்டுகளுக்கான வரி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்பது. | 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி சட்டத்தின் பிரிவுகளின் பிரகாரம் வரி அறிக்கைகளைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| **(ii)** | உள்நாட்டு இறைவரி சட்டத்தின் 152 ஆம் பிரிவின் பிரகாரம் ஆணையாளர் நாயகத்தினால், வரி அறவிடப்பட வேண்டிய மற்றும் செலுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்ட தினத்தில் வரியினை செலுத்தாது இருக்குமிடத்தில் செலுத்துமாறு கோரி வரி செலுத்துவோருக்கு அறிவிப்பினை அனுப்ப முடியும் | 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி சட்டத்தின் 152 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், வரி செலுத்துவோருக்கு குறித்த அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது என்பது. | நிலுவை வரித் தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் மாதிரி பரீட்சிப்பின் போது 2020/ 21 மற்றும் 2021/ 22 ஆகிய ஆண்டுகளுக்கு 34 நிறுவனங்களிடமிருந்து ரூபா. 1,357,272,031 நிலுவை வரித் தொகையை அறவிடுவதற்குத் திணைக்களத்தினால் முறையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை என்பது RAMIS ஒழுங்கமைப்பிற்கு அமைய அவதானிக்கப்பட்டது. | | |
| **(iii)** | உள்நாட்டு இறைவரி சட்டத்தின் 157 ஆம் பிரிவின் பிரகாரம் குறித்த தினத்தில் உரிய வரித் தொகையினை செலுத்தவில்லை எனில், செலுத்துபவர் செலுத்துவதற்கு குறிப்பிடப்பட்டிருந்த தினத்தில் இருந்து வரியினை செலுத்தும் தினம் வரையான காலப் பகுதிக்கு அந்தத் தொகையின் அடிப்படையில் வட்டியினைச் செலுத்துவதற்கு உடன்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும் மாதிரி பரீட்சிப்பின் போது மேற்கொள்ளப்பட்ட 06 நிறுவனங்களினால் ரூபா. 260,994,191 ஆன வரித் தொகை குறித்த தினத்தின் பின்னர் செலுத்தப்பட்டிருந்த போதிலும், அதற்காக சட்டத்தின் 159 ஆம் பிரிவின் பிரகாரம் மாதாந்தம் கணக்கீடு செய்யப்பட்ட மாதத்திற்கு அல்லது அதன் பகுதிக்கான 1.5 சதவீதமான ரூபா. 14,183,365 வட்டித் தொகையினை அறவிட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி சட்டத்தின் 157 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், வட்டித் தொகையினை அறவிடுதல் தொடர்பில் வரி செலுத்துவோருக்கு அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது என்பது. | 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி சட்டத்தின் பிரிவுகளின் பிரகாரம் வட்டித் தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| **3.5.2.** | உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு 2017 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆண்டு வரையில் கிடைத்திருந்த மேன்முறையீட்டுத் (Appeal) தீர்வு வழிமுறைகளை பரீட்சிப்பு செய்தல்.<br><br>2006 இன் 10 ஆம் இலக்க வருமான வரி சட்டத்தின் 165ஆம் | | |

| | | | |
|---|---|---|---|
| | பிரிவின் 14 ஆவது உப பிரிவிற்கு அமைய மற்றும் 2017 இன் 24 ஆம் இலக்க வருமான வரி சட்டத்தின் 139 ஆம் பிரிவின் 5 (இ) உப பிரிவிற்கு அமைய ஆணையாளர் நாயகத்திற்கு வரி மேன்றையீடு / நிர்வாக மீளாய்விற்காக செய்யப்பட்ட கோரிக்கை கிடைத்து 02 வருடங்களுக்குள் தீர்மானம் (Determination) / முடிவு (Decision) மற்றும் அந்த முடிவினை எடுப்பதற்கான காரணம் (குறித்த காலத்திற்கு அமுல்படுத்தப்படும் வரி சட்டத்திற்கு அமைய) வழங்கப்பட வேண்டியதுடன் மேலே கூறப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணையாக திணைக்களத்துக்கு 2017 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரையான காலத்திற்கு உரியதான ரூபா. 3,506,179,576,488 பெறுமதியான கருத்து முரண்பாடான வரி தொகைக்கு உட்பட்ட நிர்வாக மீளாய்விற்காக செய்யப்பட்ட 67,186 கோரிக்கைகள் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன. | | |
| **(i)** | வரி மேன்முறையீடு பதிவேட்டில் Received இன் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ள வரி செலுத்துபவரினால் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கை, செல்லுபடியாகும் மேன்முறையீடு என இனம் காணப்பட்டிருக்காத 2,192 வரி மேன்முறையீடுகளுக்குரிய கருத்து முரண்பாடான ரூபா. 7,415,062,005 வரி தொகை 2017 ஆம் ஆண்டு தொடக்கம் வரி மேன்றையீட்டுப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டு இருந்ததுடன், கணக்காய்வு ஆண்டு வரையிலும் அதிகபட்சம் 06 ஆண்டுகளைக் கடந்திருந்தது. | மேன்முறையீட்டுத் தீர்வு வழிமுறை தொடர்பில் மேலே கூறப்பட்ட தகவல்கள் விசாரணைக்கு உரியதாக தவறுதலாகப் பிழையான தகவல்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கை வழங்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டிருந்ததுடன் இலக்கம் EAQ/ 2024/28/06-02 இன் கீழ் 2024 ஓகஸ்ட் 28 ஆம் திகதி இடப்பட்ட பதில் கடிதத்திற்கு அமைய 2024 ஜூலை 16 ஆம் திகதியில் Received உருப்படியின் கீழ் குறிப்பிடப்பட்டிருந்த மேன்முறையீடாகக் கிடைத்திருந்த, எனினும் செல்லுபடியாகும் மேன்முறையீடு என இனம் காணப்பட்டிருக்காத தொகை, | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு மேன்முறையீடுகளை நடப்புக் காலத்தினுள் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | 2017 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதிக்கு உரியவை 81 ஆக உள்ளதுடன் அதில் கருத்து முரண்பாடான தொகை ரூபாய். 607,357,128 எனக் கணக்காய்விற்கு அறிக்கையிடப்பட்டிருந்தது. | |
| **(ii)** | உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தினால் மீளாய்வு (CGIR Hearing) ஆரம்பிக்கப்பட்ட எனினும் கணக்காய்வு தினமான 2023 மே மாதம் 25 ஆம் திகதி வரையிலும் மேன்முறையீட்டுத் தீர்வு வழிமுறையினுள் காணப்படும் 02 ஆண்டு தொடக்கம் 05 ஆண்டு வரையில் பழமையான தீர்வுகள் பூர்த்தி செய்யப்பட்டு இருக்காது 2018 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரையில் கிடைத்திருந்த பெறுமதி ரூபா. 65,934,233,430 ஆன 794 வரி மேன்முறையீடுகள் மேன்முறையீட்டு பதிவேட்டிக்கு அமைய தீர்வு செயல்முறையினுள் காணப்படுகின்றன எனக் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | மேலே கூறப்பட்ட பதில் கடிதத்திற்கு அமைய 2024 ஜூலை 16 ஆம் திகதி உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் மூலம் மீளாய்வு ஆரம்பிக்கப்பட்ட எனினும் மேன்முறையீட்டுத் தீர்வு பூர்த்தி செய்யப்பட்டு இருக்காத 2018 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரையில் கிடைத்திருந்த வரி மேன்முறையீடுகளில் தீர்க்கப்படாத மேன்முறையீடுகள் 374 ஆக உள்ளதுடன் அதில் கருத்து முரண்பாடான வரித்தொகை ரூபா. 77,873,323,792 எனக் கணக்காய்விற்கு அறிக்கையிடப்பட்டிருந்தது. | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு மேன்முறையீடுகளை நடப்புக் காலத்தினுள் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| **(iii)** | திணைக்களத்திற்கு கிடைத்திருந்த நிர்வாக மாளாய்வுகள், அதற்குரிய மேன்முறையீடுகள் கால எல்லைக்குள் தீர்ப்பதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் இன்னமும் தீர்வு செயல்முறையினுள் பல்வேறு கட்டங்களில் காணப்படும் (Pending), 958 உறுதியான தீர்மானம் இல்லாத வரி மேன்முறையீடுகள் மற்றும் அதற்குரிய பெறுமதி ரூபா. 4,990,297,715 ஆன கருத்து முரண்பாடான வரித்தொகை 2017 ஆம் ஆண்டு தொடக்கம் காணப்படுகின்றன என்பதும், அதில் 02 ஆண்டுகள் தொடக்கம் 06 ஆண்டுகள் வரையில் பழமையான மேன்முறையீடுகள் இன்னமும் மேன்முறையீட்டுத் தீர்வு செயல்முறையினுள் | மேலே கூறப்பட்ட பதில் கடிதத்திற்கு அமைய 2024 ஜூலை 16 ஆம் திகதி வரையில் தீர்வு செயல்முறையில் பல்வேறு கட்டங்களில் இன்னமும் காணப்படுகின்ற, 2018 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரையிலான காலப் பகுதிக்கு உரிய 124 தீர்க்கப்படாத வரி மேன்முறையீடுகள் உள்ளதுடன் அதன் கருத்து முரண்பாடான வரித்தொகை ரூபா. 987,920,117 எனக் கணக்காய்விற்கு அறிக்கையிடப்பட்டிருந்தது. | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு மேன்முறையீடுகளை நடப்புக் காலத்தினுள் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காணப்படுகின்றன என்பதும் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | | |
| **(iv)** | பெரும்பாலான மேன்முறையீடுகள் ஆரம்ப மதிப்பீட்டு வேலை நிறைவடையும் போது எழுந்த சிக்கலான, முன்னைய ஆண்டு நட்டம் உறுதிப்படுத்தப்படாததன் அடிப்படையில், முன் கொண்டு வரப்பட்ட தீர்க்கப்படாத வரி பற்று, முன்னைய காலாண்டின் மீளச் செலுத்தல்கள், வேறு காலங்களுக்கு வரி பற்று இருந்தமை போன்ற பல்வேறு காரணங்களைத் தீர்ப்பதற்கு வழங்கப்பட்ட மதிப்பீட்டின் அடிப்படையில் மேன்முறையீடுகளை போன்றே உத்தியோகத்தர்களினால் மேல்முறையீடுகள், விசாரணைகளாக இனம் காணப்பட வேண்டிய போதிலும் தவறுதலாக மேன்முறையீடாக பதிவு செய்யப்பட்டமையும் மற்றும் மேன்முறையீடு தீர்க்கும் போது ஒழுங்கமைப்பினுள் உள்ள சிக்கல்களின் அடிப்படையில் நடைமுறையில் பல்வேறு சிக்கல்களுக்கு முகம் கொடுப்பதற்கு நேரிட்டிருந்தமை மற்றும் ஒழுங்கமைப்பில் தரவுகள் இற்றைப்படுத்தப்பட்டிருக்காமை போன்ற பல்வேறு காரணங்களினால் மேன்முறையீட்டுத் தீர்வு செயல்முறை தாமதமடைந்துள்ளது என உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தினால் கணக்காய்விற்குத் தெரிவிக்கப்பட்டு இருந்தது. | மேன்முறையீடு தீர்வு தாமதமடைந்ததில் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்த பல்வேறு காரணங்கள் காணப்படுகின்றன என உள்நாட்டு இறைவழி ஆணையாளர் நாயகத்தினால் கணக்காய்விற்குத் தெரிவிக்கப்பட்டிருந்தது. | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு மேன்முறையீடுகளை நடப்புக் காலத்தினுள் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| **3.5.3.** | **2022 ஆம் ஆண்டில் மிகை வரி சேரிப்பு தொடர்பான பரீட்சிப்பு** | | |
| **(i)** | ஒரு தடவை மட்டும் அறவிடக்கூடிய வரியாக 2022 ஆம் ஆண்டில் பாதீட்டின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த மிகை விதிப்பு வரி, 2022 இன் 14 ஆம் இலக்க மிகை விதிப்பு வரி சட்டத்தின் 2 (1) ( அ) பிரிவின் பிரகாரம், 2020 ஏப்ரல் 01 ஆம் திகடகயில் இருந்து | RAMIS ஒழுங்கமைப்பினுள் உள்ளடக்கப்படாத போதிலும், மிகை விதிப்பு வரி தொடர்பான தகவல்கள் சரியாக இனம் காணப்பட்டுள்ளதுடன், தகவல்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. நிலுவை வரியினை அறவிடுவதற்கு உரிய வழிவகைகள் | வரிவிதிப்பிற்கு உட்படுத்தப்படும் வரி செலுத்துவோரை சரியாக இனம் காண்பதற்கு மற்றும் வரிப் பொறுப்பு முறையாக வெளிப்படுத்தப்படும் |

| | | | |
|---|---|---|---|
| | ஆரம்பிக்கப்படும் மதிப்பீட்டு ஆண்டுக்காக, வரி அறவிடப்படக்கூடிய வருமானம் ரூபா. 2000 மில்லியனை விஞ்சி பெற்றுக் கொள்ளும் ஏதேனும் நபரிடமிருந்து, கூட்டு வியாபாரம் அல்லது நிறுவனத்திடம் இருந்து, வரி அறவிடப்படக் கூடிய வருமானத்தின் அடிப்படையில் 25 சதவீத விகிதாசாரத்தில் அதுவிடப்படக்கூடிய வகையில் அமுல்படுத்தப்பட்டிருந்தது. மேலும் மிகை விதிப்பு வரிகளுக்கு உரிய தகவல்கள் RAMIS ஒழுங்கமைப்பில் உள்ளடக்கப்பட்டிருக்காதுடன், அந்த வரி கோவைகளாக (Manual) பேணிச் செல்லப்பட்டிருந்தது. | மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பது. | வகையில் ஒழுங்கமைப்பினை இற்றைப்படுத்தி பேணுதல், நிலுவை வரியினை அறவிடுவதற்கு முறையான நடவடிக்கை எடுத்தல் என்பன முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். |
| **(ii)** | மிகை விதிப்பு வரி சட்டத்தின் 2(4) ஆம் பிரிவிற்கு அமைய இந்த சட்டத்தின் கீழ் வரி செலுத்துவதற்கு உட்பட்ட அனைத்து வரி செலுத்துபவரும் ஆணையாளர் நாயகத்திடம் 2022 ஏப்ரல் மாதம் இருபதாம் திகதி மற்றும் 2022 யூலை மாதம் இருபதாம் திகதிஅல்லது அல்லது அந்தத் தினத்திற்கு முன்னர் சமனான இரு தவணைகளில் வரியினை செலுத்துதல் வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. அதற்கு அமைய திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள தகவல்களைப் பரீட்சிப்பு செய்யும் போது 08 வரி செலுத்துபவர்களினால் குறித்த தினத்தில் வரித் தொகை செலுத்தப்படாது தாமதமாக செலுத்தப்பட்டிருந்த வரித் தொகையின் பெறுமதி ரூபா. 2,692,889,914 ஆகும். | RAMIS ஒழுங்கமைப்பினுள் உள்ளடக்கப்படாத போதிலும், மிகை விதிப்பு வரி தொடர்பான தகவல்கள் சரியாக இனம் காணப்பட்டுள்ளதுடன், தகவல்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. நிலுவை வரியினை அறவிடுவதற்கு உரிய வழிவகைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பது. | மிகை விதிப்பு வரி சட்டத்தின் 2 (4) ஆம் பிரிவின் பிரகாரம் குறித்த தினத்தில் வரித் தொகையினைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| **(iii)** | உள்நாட்டு இறைவரி சட்டத்தின் 157 மற்றும் 159 ஆம் பிரிவுகளின் பிரகாரம் குறித்த தினத்தின் பின்னர் வரித் தொகையினை செலுத்தும் காரணத்தினால், அறவிடப்பட வேண்டிய தண்டம் மற்றும் வட்டித் தொகையினை செலுத்துமாறு | உள்நாட்டு இறைவரி சட்டத்தின் ஒழுங்கு விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு உரிய தண்டம் மற்றும் வட்டித் தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பது. | தாமதமாக வரியினைச் செலுத்தும் காரணத்தினால் அறவிடப்பட வேண்டிய தண்டம் மற்றும் வட்டித் |

| | | | |
|---|---|---|---|
| | தெரிவித்து 04 வரி செலுத்துபவர்களுக்கு 2023 ஆம் ஆண்டில் அவ்வப்போது அறிவுறுத்தல் வழங்கப்பட்டு இருந்ததுடன், குறித்த மொத்த வட்டித் தொகை ரூபா. 71,134,984 மற்றும் தண்டப் பணம் ரூபா. 82,239,024 ஆகும். இதற்கு மேலதிகமாக மேலும் ஒரு வரி செலுத்துபவருக்கு உரிய வட்டி மற்றும் தண்டப் பணத்தினை செலுத்துமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது எனக் கணக்காய்விற்குத் தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்குரிய எழுத்துமூல சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | தொகையினை விரைவில் அறவிடுதல் வேண்டும். |
| **3.5.4.** | **வரி நிர்வாகத்திற்கான வருமான நிர்வாக முகாமைத்துவ தகவல் ஒழுங்கமைப்பினைப் (RAMIS) பயன்படுத்துதல் தொடர்பில் பரீட்சிப்பு செய்தல்.** | | |
| | உள்நாட்டு இறைவரி திணைக்களத்தில் வரி சேகரித்தலுக்காக வருமான நிர்வாக முகாமைத்துவ தகவல் ஒழுங்கமைப்பைப் (RAMIS) பயன்படுத்துதல் தொடர்பிலான மாதிரிக் கணக்காய்வு பரீட்சிப்பின் போது அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு ஆகும். | | |
| **(i)** | உழைக்கும் போது செலுத்தும் வரி (PAYE) மற்றும் நிறுத்தி வைத்தல் வரி (WHT) ஆகிய வரி வகைகளுக்கு உரியதான மதிப்பீடு 2018 / 2019 ஆண்டு தொடக்கம் 2021 / 2022 ஆண்டு வரையில் மேலதிக மதிப்பீட்டு அறிக்கை வழங்குதல் வருமான நிர்வாக முகாமைத்துவத் தகவல் ஒழுங்கமைப்பில் இருந்து புறம்பாக மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் காரணமாக வருமான நிர்வாக முகாமைத்துவ தகவல் ஒழுங்கமைப்பினுள் வரி செலுத்துபவர்களின் வரிப் பொறுப்பு | அந்த மேலதிக மதிப்பீட்டை ஒழுங்கமைப்பில் உள்ளடக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்பது. | மதிப்பீட்டு அறிக்கை வழங்கப்படக் கூடிய வகையில் RAMIS 2.0 மொடியூலை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கை விரைவில் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சரியாக பதிவிடப்பட்டிருக்கவில்லை. | | |
| **(ii)** | வரி தொடர்பான அனைத்து தகவல்களும் ஒழுங்கமைப்பில் உள்ளடக்கப்படாத காரணத்தால் நிலுவை வரி அறிக்கையின் மீதிகள் ஒழுங்கமைப்பின் மீதிகளுடன் சரியாக இல்லாமை மற்றும் ஒழுங்கமைப்பில் காணப்படும் பல்வேறு குறைபாடுகளின் அடிப்படையில் உத்தியோகத்தர்களுக்கு வேலை உருப்படியினை நிறைவு செய்வதற்கு முடியாது என அவ்வப்போது கணக்காய்வு அறிக்கையிடப்பட்டுள்ள சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. | RAMIS 2.0 இல் நடவடிக்கைகளை விரைவில் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது என்பது. | RAMIS 2.0 மொடியூலை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கை விரைவில் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |
| **(iii)** | உள்நாட்டு இறைவரி திணைக்களத்தில் வருமான நிர்வாக முகாமைத்துவத் தகவல் ஒழுங்கமைப்பு சுயுஆஐளு அபிவிருத்தி நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் இருந்து இதுவரையில் செயல்படுத்தப்படும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள வரிகளின் வரி நிர்வாக நடவடிக்கைகள் இதுவரையில் ஒழுங்கமைப்பிலிருந்து புறம்பாக மேற்கொள்ளப்படுகின்றது எனப் பின்வருமாறு கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | | |
| **(அ)** | RAMIS செயல்படுத்தல் கட்டம் II இன் கீழ் ஒழுங்கமைப்பில் உள்ளடக்குவதற்கு எதிர்பார்க்கப்பட்ட பந்தயம் மற்றும் சூதாட்ட வரி இதுவரையில் ஒழுங்கமைப்பில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. மேலே கூறப்பட்ட பந்தயம் மற்றும் சூதாட்ட வரியின் மூலம் 2023 ஆம் ஆண்டின் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் ரூபா.5,500 மில்லியன் ஆக உள்ளதுடன் 2023 ஆம் ஆண்டின் உண்மையான வருமானம் ரூபா.7,421,816,561 உம் நிலுவை வரி பெறுமதி ரூபா. 5,563,543,778 உம் ஆகும். பந்தயம் மற்றும் சூதாட்ட வரி சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள வரி | பந்தயம் மற்றும் சூதாட்ட வரி ஒழுங்கமைப்பினுள் உள்ளடக்கப்படுவதன் தேவைப்பாடு பரிசீலனை செய்யப்பட்டு வருகின்றது என்பது. | RAMIS 2.0 மொடியூலை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கை விரைவில் பூர்த்தி செய்யப்பட வேண்டியதுடன் அனைத்து வரி வகைகளும் ஒழுங்கமைப்பினுள் உள்ளடக்கப்படுதல் சாலச் சிறந்ததாகும். |

| | | | |
|---|---|---|---|
| | செலுத்துபவர்களின் எண்ணிக்கை கசினோவிற்கு 04 உம் மற்றும் ஏனைய பந்தயம் மற்றும் சூதாட்ட வியாபாரங்கள் 401 உம் ஆகும். | | |
| **(ஆ)** | 2005 இன் 5 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டு செயல்படுத்தப்படும், பங்கு தரகர்கள், அல்லது பங்கு வியாபாரிகள் அல்லது பொறுப்பான வங்கி போன்ற மூன்றாம் தரப்பினர்களினால் சந்தர்ப்பத்திற்கு ஏற்ற வகையில் சேகரிக்கப்பட்டு திணைக்களத்திற்கு மாற்றப்படும் பங்கு பரிமாற்ற வரி RAMIS ஒழுங்கமைப்பில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. குறித்த வரியின் மூலம் 2023 ஆம் ஆண்டில் ரூபா. 2,477,736, 910 வருமானம் ஈட்டப்பட்டிருந்ததுடன் 2023 ஆம் ஆண்டுக்கான மதிப்பீடு செய்யப்பட்ட வரி வருமானம் ரூபா. 1,980 மில்லியன் ஆகும். | இணங்குகின்றேன் என்பது. | RAMIS 2.0 மொடியூலை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கை விரைவில் பூர்த்தி செய்யப்பட வேண்டியதுடன் அனைத்து வரி வகைகளும் ஒழுங்கமைப்பினுள் உள்ளடக்கப்படுதல் சாலச் சிறந்ததாகும். |
| **(இ)** | சமூக பாதுகாப்பு உதவு தொகை வரியினை சேகரித்தல் மற்றும் நிர்வாகித்தல் செயல்பாடுகளில் ஒரு சில கூறுகளை RAMIS ஒழுங்கமைப்பினூடாக மேற்கொள்வதற்கு ஒழுங்கு அமைப்பினுள் வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்காததால் அதுவரையில் செயல்படுத்தப்பட்ட Legacy கணனி ஒழுங்கமைப்பின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது என்பது அவதானிக்கப்பட்டது. அது திணைக்களத்தின் வருமான நிர்வாக நடவடிக்கைகளை நவீன மயப்படுத்துதலில் இருந்து மற்றும் தன்னியக்க மயப்படுத்துதலில் இருந்து எதிர்பார்த்த நோக்கம் நிறைவேற்றப்படாமை என அவதானிக்கப்பட்டது. மேலும் அதன் மூலம் RAMIS ஒழுங்கமைப்பிலிருந்து மீண்டும் Legacy கணினி ஒழுங்கமைப்பு வரையில் செல்லுதல் RAMIS ஒழுங்கு அமைப்பின் ஊடாக எதிர்பார்க்கப்பட்ட நோக்கத்தினை | ஒழுங்கமைப்பினுள் உள்ளடக்கப்படுதல் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என்பது. | RAMIS 2.0 மொடியூலை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கை விரைவில் பூர்த்தி செய்யப்பட வேண்டியதுடன் அனைத்து வரி வகைகளும் ஒழுங்கமைப்பினுள் உள்ளடக்கப்படுதல் சாலச் சிறந்ததாகும். |

| | | | |
|---|---|---|---|
| | நிறைவேற்றப்படாமையே என்பதும் Legacy ஒழுங்கமைப்பைப் படிப்படியாக பயன்பாட்டில் இருந்து அகற்றுவதற்கு உள்ள சந்தர்ப்பத்தில் மீண்டும் அந்த ஒழுங்கமைப்பில் தரவுகளை உள்ளடக்குதல் ஆபத்தானது என்பதும் அவதானிக்கப்பட்டது. | | |
| **(ஈ)** | 2015 ஆம் ஆண்டில் குடியேற்ற வரி மற்றும் 2017 ஆம் ஆண்டில் மாற்றல் கட்டணம் என்பன அறிமுகப்படுத்தப்பட்டிருந்ததுடன், அந்த வரிகளை அறிமுகப்படுத்தி இதுவரையிலும் 03 வருடங்களுக்கும் அதிக காலம் கடந்துள்ள போதிலும் வருமான நிர்வாக முகாமைத்துவ தகவல் ஒழுங்கமைப்பின் மூலம் வரி நிர்வாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாததுடன், புதிய வரி அறிமுகப்படுத்துவதற்கும் அவற்றை ஒழுங்கு அமைப்பினுள் உள்ளடக்குவதற்கும் இடையில் அதிக கால தாமதம் உள்ளது என்பது அவதானிக்கப்பட்டது. | இணங்குகின்றேன் என்பது. | RAMIS 2.0 மொடியூலை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கை விரைவில் பூர்த்தி செய்யப்பட வேண்டியதுடன் அனைத்து வரி வகைகளும் ஒழுங்கமைப்பினுள் உள்ளடக்கப்படுதல் சாலச் சிறந்ததாகும். |
| **(உ)** | வருமான நிர்வாக முகாமைத்துவ தகவல் ஒழுங்கமைப்பு (RAMIS) அபிவிருத்தி நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் இனம் காணப்பட்ட ஒரு சில வரி வகைகளைப் போன்றே, ஒழுங்கமைப்பு அபிவிருத்தி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் நடப்பு காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட வரிகளுக்கும் உரிய நிர்வாக நடவடிக்கைகள் இந்த ஒழுங்கமைப்பின் மூலம் செயல்திறனாக மேற்கொள்ளப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | கடந்த வருடங்களில் நிலவிய COVID தொற்றுநோய் நிலைமை, பொருளாதார வீழ்ச்சி மற்றும் RAMIS செயல் திட்டத்திற்கு உரியதான உடன்படிக்கை இடப்படாததன் அடிப்படையில் ஏற்பட்ட சிக்கலான நிலைமைகள் காரணமாக RAMIS 2.0 மொடியூலை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகள் சற்று தடைப்பட்டதுடன், தற்போது அது தொடர்பில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்பது. | RAMIS 2.0 மொடியூலை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கை விரைவில் பூர்த்தி செய்யப்பட வேண்டியதுடன் அனைத்து வரி வகைகளும் ஒழுங்கமைப்பினுள் உள்ளடக்கப்படுதல் சாலச் சிறந்ததாகும். |

**3.5.5. வருமான வரி பரீட்சிப்பு**

TIN இலக்கம் 11401xxxx இன் நிறுவன வருமான வரி (Corporate Income Tax) செலுத்துதல்

| | | | |
|---|---|---|---|
| | தொடர்பில் செய்யப்பட்ட விரிவான கணக்காய்வுப் பரீட்சிப்பின் போது அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்பட்டுள்ளன. | | |
| **(i)** | மதிப்பீட்டு ஆண்டு 2019/20, 2021/22 மற்றும் 2022/23 ஆகிய மதிப்பீட்டு ஆண்டுகளுக்கு தன்னியக்க மதிப்பீட்டு அறிக்கை/வரி அறிக்கை (Tax Return) மேலே கூறப்பட்ட நிறுவனத்தினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் RAMIS ஒழுங்கமைப்பினுள் ஆகக் குறைந்தது அந்த அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள வரி பொறுப்பாவது, செலுத்தப்பட வேண்டிய வரி மீதியாக குறிப்பிடப்பட்டிருக்காத காரணத்தால் ஒழுங்கமைப்பினுள் நிறுவனத்தின் பெயரில் ஒவ்வொரு காலப்பகுதிக்கும் உரியதான தவறான வரி மீளச் செலுத்தல் (Refund) பதிவிடப்பட்டிருந்ததனால் அரசாங்கத்திற்கு அறவிடப்பட வேண்டிய வரி வருமானம் தொடர்பில் தவறுகளுடன் பதிவிடப்பட்டுள்ளது என்பது அவதானிக்கப்பட்டது. | இணங்குகின்றேன் என்பது. | RAMIS 2.0 மொடியூலை அபிவிருத்தி செய்யும் மற்றும் தவறுகளை திருத்தும் நடவடிக்கைகள் விரைவில் பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும். |
| **(ii)** | 2015/16 மதிப்பீட்டு ஆண்டினுள் வருட இறுதி செலுத்தப்பட வேண்டிய நிறுவன வருமான வரி மற்றும் தண்டப் பணம் ரூபா. 21,624,8671 ஆக இருந்ததுடன் அந்த வரித் தொகை கணக்காய்வு தினமான 2024 மே 03 ஆம் திகதி வரையில் செலுத்துவதற்கு நிறுவனம் நடவடிக்கை எடுத்திருக்காததுடன் RAMIS ஒழுங்கமைப்பினுள் இன்னமும் அதற்குரிய வேலை உருப்படி, 08 வருடத்திற்கும் அதிக காலம் தொட்டு திறக்கப்பட்டு காணப்படுகின்றது என்பது அவதானிக்கப்பட்டது. | 1516 - நிறுத்தி வைத்தல் வரி இடமளிக்காமை தொடர்பில் வரி செலுத்துனர் எதிர்ப்பினைப் பதிவு செய்திருந்ததுடன் இது தொடர்பான நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்ததன் பின்னர் தற்போது RAMIS ஒழுங்கமைப்பில் காணப்படும் குறைபாடுகள் காரணமாக குறித்த வரி பற்று இடமளிப்பதற்கு முடியாது காணப்படுகின்றது எனவும் மற்றும் இது தொடர்பில் RAMIS பிரிவுடன் கலந்துரையாடப்பட்டு வரி பற்று இடமளித்ததன் பின்னர் வேலை உருப்படியை நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | RAMIS 2.0 மொடியூலை அபிவிருத்தி செய்யும் மற்றும் தவறுகளை திருத்தும் நடவடிக்கைகள் விரைவில் பூர்த்தி செய்யப்பட வேண்டியதுடன் அனைத்து வரி வகைகளும் ஒழுங்கமைப்பினுள் உள்ளடக்கப்படுதல் சாலச் சிறந்ததாகும். |

| | | | |
|---|---|---|---|
| **(iii)** | 2019/20 தொடக்கம் 2022/23 காலப் பகுதிக்குள் நிறுவனத்தின் பெயரில் தன்னியக்க மதிப்பீடு கோவை இடப்பட்டிருந்த போதிலும், நிறுவனத்தினால் செலுத்தப்பட்ட வரித் தொகை மட்டும் பதிவிடப்பட்டிருந்தது. இதன் காரணமாக திணைக்களம் வரி செலுத்துனருக்கு மீளச் செலுத்த வேண்டிய தவறான வரி மீதிகள் (Refund Amount) ஒழுங்கமைப்பினுள் அவதானிக்கப்பட்டது. | இந்த நிலைமை RAMIS ஒழுங்கமைப்பு முழுமையாக செயல்படும்போது தவிர்க்கப்படும் என்பது. | RAMIS 2.0 மொடியூலை அபிவிருத்தி செய்யும் மற்றும் தவறுகளை திருத்தும் நடவடிக்கைகள் விரைவில் பூர்த்தி செய்யப்பட வேண்டியதுடன் அனைத்து வரி வகைகளும் ஒழுங்கமைப்பினுள் உள்ளடக்கப்படுதல் சாலச் சிறந்ததாகும். |
| **3.5.6.** | TIN இலக்கத்தின் இறுதி இலக்கம் 2525 இன் கீழ் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் சீனி இறக்குமதி செய்திருந்த தேர்வு செய்யப்பட்ட இறக்குமதியாளர்கள் தொடர்பில் வரி பதிவு செய்தல் மற்றும் செலுத்துதல் தொடர்பான பரீட்சிப்பின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| **(i)** | இரண்டு வரி செலுத்துனர்கள் ஒழுங்கமைப்பினுள் தற்போது பெறுமதி சேர்க்கப்பட்ட வரி செலுத்துவதற்காக இலக்கம் 7000 இன் கீழ் பதிவு செய்துள்ள செயல்படும் வரி செலுத்துனர்களான போதிலும், மாதிரி கணக்காய்வுக்கு அமைய 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் முறையே CIF மொத்த பெறுமதியில் ரூபா. 270,297,115 மற்றும் ரூபா. 175,177,269 சீனி இறக்குமதி செய்வதற்கான TIN இலக்கம் 2525 இன் கீழ் தற்காலிகமாக பதிவு செய்தல் இலக்கம் வழங்கப்பட்டிருந்தது. இவ்வாறே செயல்படும் VAT வரி முறைமையின் கீழ் பதிவு செய்துள்ள வரி செலுத்துனர்களுக்கு தற்காலிகப் பதிவினை TIN இலக்கம் வழங்குவதன் மூலம், அது தொடர்பில் திணைக்களத்தில் தாபிக்கப்பட்டுள்ள உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒழுங்கான | மேலே குறிப்பிடப்பட்ட நிறுவனம் நிரந்தரமாக பெறுமதி சேர்க்கப்பட்ட வரிக்கு பதிவு செய்துள்ள உயிர்ப்புள்ள வரி செலுத்துபவராகும் போது தற்காலிகப் பதிவு நிச்சயமாக இரத்துச் செய்யப்படுவதுடன் அதனால் அதன் பின்னர் தற்காலிக வரி சான்றிதழ் மூலம் பொருட்களை இறக்குமதி செய்ய முடியாதாகும். அவ்வாறு இறக்குமதி செய்யப்பட்டு இருக்குமாயின் அது உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட சந்தர்ப்பமாகும் என்பது. | தற்போது பெறுமதி சேர்க்கப்பட்ட வரி செலுத்துவதற்காக இலக்கம் 7000 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள செயல்படும் வரி செலுத்துபவர்களுக்காக தற்காலிகப் பதிவு இலக்கம் வழங்குவதற்கு முடியாத வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்றினைத் தாபித்தல் மற்றும் RAMIS ஒழுங்கமைப்பின் மூலம் அவ்வாறான செயல்பாடுகள் தன்னிச்சையாக வெளிப்படுத்தப்படும் வகையில் ஒழுங்கமைப்பினை |

| | | | |
|---|---|---|---|
| | முறையில் செயல்படவில்லை எனவும் மற்றும் RAMIS ஒழுங்கு அமைப்பின் மூலம் அவ்வாறான செயல்பாடுகள் தன்னிச்சையாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை எனவும் அவதானிக்கப்பட்டது. | | அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |
| **(ii)** | தற்காலிக VAT முறைமையின் கீழ் இறக்குமதி மேற்கொண்டுள்ள சீனி இறக்குமதியாளர்களிடையேயான மாதிரிக் கணக்காய்விற்கு அமைய 14 இறக்குமதியாளர்கள் வருமான வரிக்காகப் பதிவு செய்திருந்ததுடன், 20222/20233 மதிப்பீட்டு ஆண்டுக்கு உரியதான 2023 நவம்பர் 30 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டிய வருமான வரி அறிக்கை கணக்காய்வு தினமான 2024 ஜனவரி 30 ஆம் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன், அவர்கள் அனைவரினாலும் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் முறையே 2525 இன் கீழ் கொண்டுவரப்பட்டிருந்த சீனி இறக்குமதிகளின் மொத்த CIF பெறுமதி ரூபா.3,580,948,952 உம் மற்றும் ரூபா.8,661,150,315 உம் ஆகும். | 14 இறக்குமதியாளர்களினால் வருமான வரி அறிக்கை சமர்ப்பித்தலின் முன்னேற்றம் கணக்காய்விற்கு தெரிவிக்கப்பட்டு இருந்தது. | பெறுமதி சேர்க்கப்பட்ட வரிக்காக தற்காலிகப் பதிவு வரி இலக்கத்தின் கீழ் பதிவு செய்யும்போது உரிய செலுத்தப்பட வேண்டிய வரி செலுத்தப்பட்டுள்ளது என்பதற்கு உரிய வரி அறிக்கை வழங்கப்பட்டுள்ளது என்பதனை உறுதிப்படுத்திக் கொண்டதன் பின்னர் தற்காலிக பதிவு இலக்கம் வழங்கப்படுதல். |
| **3.5.7.** | **மதுபான அனுமதிப் பத்திரதாரர்களுக்கு இசைவாணை சான்றிதழ் வழங்குதல் தொடர்பில் பரீட்சிப்பு செய்தல்.** | | |
| | 2024 ஆம் ஆண்டில் வருடாந்த மதுவரி அனுமதிப்பத்திரம் புதுப்பிக்கும் போது உள்நாட்டு இறைவரி திணைக்களத்திடமிருந்து வருமான இசைவாணை சான்றிதழைப் பெற்றுக் கொள்வது கட்டாயமாக்கப்பட்டிருந்த நிபந்தனையை மதுவரி திணைக்களத்தினால் அகற்றப்பட்ட காரணத்தினால் 2024 ஆம் ஆண்டுக்கு 443 அனுமதி பத்திரதாரர்கள் உள்நாட்டு இறைவரி திணைக்கள பிரதான அலுவலகத்தில் இருந்து இசைவாணை சான்றிதழுக்காக | இந்த இசைவாணை சான்றிதழ் 2023 நவம்பர் 20 ஆம் திகதி இடப்பட்ட அறிவுரை கோவை இலக்கம் 1,2 மற்றும் 4 ஆம் பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுரைகளை பின்பற்றி வழங்கப்பட்டுள்ளது என்பதும் மற்றும் அந்த அறிவுரை கோவை பிரதி மற்றும் உரிய தகவல்கள் 2024 ஏப்ரல் 25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்பது. | மதுபான அனுமதிப் பத்திரத்தினைப் பெற்றுக் கொள்வதற்காக வரி இசைவாணை சான்றிதழ் வழங்கும் போது உரிய செலுத்தப்பட வேண்டிய வரி செலுத்தப்பட்டுள்ளது என்பதற்கான / உரிய வரி அறிக்கை வழங்கப்பட்டுள்ளது என்பதற்கான |

| | | | |
|---|---|---|---|
| | விண்ணப்பித்திருந்த போதிலும் அதில் 241 அனுமதிப் பத்திரதாரர்கள் இசைவாணை சான்றிதழைப் பெற்றுக் கொள்வதற்கு முன்வந்திருக்கவில்லை. அவ்வாறு இசைவாணை சான்றிதழைப் பெற்றுக் கொள்வதற்கு முன் வந்திருக்காத 40 வரிசெலுத்துனரின் மாதிரியினைப் பரீட்சிப்பு செய்யும் போது 21 வரி செலுத்துனர்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா. 187,644,815 ஆன நிலுவை வரி மீதி உள்ளது என்பது 2023 ஜூன் 30 ஆம் திகதியில் நிலுவை வரிப் பதிவேட்டிற்கு அமைய அவதானிக்கப்பட்டது. | | திருப்திகரமான உறுதிப்பாட்டினைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் மதுபான அனுமதிப் பத்திரத்தினைப் பெற்றுக் கொள்வதற்கான வரி இசைவாணை சான்றிதழ் வழங்கப்படுதல் வேண்டும். |
| **3.5.8.** | உள்நாட்டு இறைவரி திணைக்களத்தில் 2014/2015 ஆண்டு தொடக்கம் 2022/2023 ஆண்டு வரையில் வருடாந்த வரி மற்றும் மொத்த பெறுமதி சேர் வரியினை அறவிடுதல் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரீட்சிப்பின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| **(i)** | 1988 இன் 40 இலக்க பந்தயம் மற்றும் சூதாட்ட வரி சட்டத்தின் 2 ஆம் பிரிவு மற்றும் 2015 இன் 14 ஆம் இலக்க பந்தயம் மற்றும் சூதாட்ட வரி (திருத்தப்பட்டது) சட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களுக்கு அமைய நேரடி ஒளிபரப்பு வசதிகளைக் கொண்ட பந்தய மத்திய நிலையங்களினால் மதிப்பீட்டு ஆண்டு 2014/2015 (2015 மார்ச் 31) வரையில் செலுத்தப்பட வேண்டிய வருடாந்த வரி ரூபா. 300,000 உம் மற்றும் மதிப்பீட்டு ஆண்டு 2015/2016 (2015 ஏப்ரல் 01) தொடக்கம் செலுத்தப்பட வேண்டிய வருடாந்த வரி ரூபா.600,000 உம் ஆக இருந்ததுடன் 2023 ஏப்ரல் 01 ஆம் திகதி தொடக்கம் அது ரூபா. 1,000,000 வரையில் அதிகரிக்கப்பட்டு இருந்ததுடன் | உரிய நிலுவை வரித் தொகையில் ஒரு வரிசெலுத்துனரின் நிலுவை வரித் தொகை மற்றும் 50 சதவீத தண்டப் பணம் எனும் ரீதியில் ரூபா. 525,000 தொகை அறவிடப்பட்டுள்ளதுடன், மீதி வரித் தொகையினை அறவிடுவதற்கு சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்பது. | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் வரி செலுத்துனர்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய வரித் தொகையினை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அந்த வரி மதிப்பீட்டு ஆண்டினுள் சமனான 4 தவணைகளில் மற்றும் குறித்த தவணையை காலாண்டு ஆரம்பிப்பதற்கு முன்னர் செலுத்த வேண்டியதுடன் 2023 மதிப்பீட்டு ஆண்டுக்கு பதிவு செய்யப்பட்டு வரி செலுத்துவோரினால் ரூபா. 103,450,000 பெறுமதியான வருடாந்த வரித் தொகை மட்டும் செலுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | | |
| **(ii)** | 1988 இன் 40 ஆம் இலக்க பந்தயம் மற்றும் சூதாட்ட வரி சட்டத்தின் 2(1) ஆம் பிரிவு மற்றும் 2001 இன் 07 ஆம் இலக்க பந்தயம் மற்றும் சூதாட்ட வரி சட்டத்தின் திருத்தங்களுக்கு அமைய நேரடி ஒளிபரப்பு வசதிகளைக் கொண்ட பந்தய மத்திய நிலையங்களினால் வருடாந்த வரிக்குரிய தவணை காலாண்டு ஆரம்பிப்பதற்கு முன்னர் செலுத்தப்பட வேண்டிய போதிலும் தற்போது வரையிலும் செலுத்தி முடிக்கப்பட்டுள்ள வருடாந்த வரி குறித்த வகையில் உரிய தினங்களில் செலுத்தப்பட்டிருக்காததுடன் தாமதமாக செலுத்தப்பட்டு வந்துள்ளது என்பதும் அந்த தாமதமான வருடாந்த வரி செலுத்தல் தொடர்பில் விதிக்கப்படக் கூடிய தண்டனைத் தொகை கணக்காய்வு தினமான 2023 மார்ச் 31 வரையிலும் அண்ணளவாக ரூபா. 103,100,000 தொகை எனக் கணக்காய்வில் மேற்கொள்ளப்பட்ட கணக்கீட்டிற்கு அமைய அவதானிக்கப்பட்டது. | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வரி செலுத்துனரிடம் இருந்து மீதி தொகையினை அளவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்பது. | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் வரி செலுத்துனர்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவை வரி மற்றும் தண்டப் பணத்தினை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| **(iii)** | நேரடி ஒளிபரப்பு வசதிகளைக் கொண்ட பந்தய மத்திய நிலையங்களுக்கு உரியதான 2014 ஆம் ஆண்டு தொடக்கம் செலுத்தப்பட்டிருக்காத வருடாந்த வரி மற்றும் தாமதமாக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் தொடர்பில் வழங்கப்பட்டுள்ள மதிப்பீடு தொடர்பான பரீட்சிப்பின் போது இதுவரையிலும் | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வரி செலுத்துனரிடம் இருந்து மீதி தொகையினை அளவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்பது. | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் வரி செலுத்துனர்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவை வரி மற்றும் தண்டப் பணத்தினை விரைவில் |

| | | | |
|---|---|---|---|
| | அறவிடப்படாது காணப்படும் வரி மற்றும் தண்டப் பணம் ரூபா. 206,200,000 என்பது அவதானிக்கப்பட்டது. | | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| **(iv)** | 2014/ 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2022/2023 ஆம் ஆண்டு வரையில் 03 வியாபார உரிமையாளர்கள் ஒரு சில காலப் பகுதிகளுக்கு மாதாந்த மொத்த பெறுமதி சேர் வரியினைக் குறித்த வகையில் உரிய தினங்களுக்கு முன்னர் செலுத்தி இருக்காததுடன் அதற்கு அமைய ஒரு சில வருடங்களுக்கு நேரடி ஒளிபரப்பு வசதிகளைக் கொண்ட பந்தய மத்திய நிலையங்களில் தாமதமாக மொத்த பெறுமதி சேர் வரி கொடுப்பனவு தொடர்பில் இன்னமும் அறவிடுவதற்கு காணப்படும் தண்டப் பணம் அண்ணளவாக ரூபா. 1,679,339,966 தொகை என்பது அவதானிக்கப்பட்டது. | 2014/2015, 2015/2016 மதிப்பீட்டு ஆண்டுகளுக்கு உரிய நிலுவை வரி தொடர்பில் வரி செலுத்துனர்களினால் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மேன்முறையீடொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்பது. | வரி செலுத்துனர்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவை வரி மற்றும் தண்டப் பணத்தினை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| **(v)** | 2014 ஆம் ஆண்டு தொடக்கம் நேரடி ஒளிபரப்பு வசதிகளைக் கொண்ட பந்தய மத்திய நிலையங்களில் செலுத்தப்படாத மாதாந்த மொத்த பெறுமதி சேர் செலுத்தப்பட வேண்டிய வரி மற்றும் தாமதமாக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவு தொடர்பில் இதுவரையிலும் வழங்கப்பட்டுள்ள மதிப்பீடு தொடர்பில் அரவிடப்படாது காணப்படும் மாதாந்த மொத்த பெறுமதி சேர் வரி மற்றும் தண்டப்பணம் சுமார் ரூபா. 2,621,108,150 ஆகும். | இந்த நிலுவை வரித்தொகைக்காக மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் மேல் முறையீடு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்பது. | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் வரி செலுத்துனர்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவை வரி மற்றும் தண்டப் பணத்தினை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| **(vi)** | வருமான நிர்வாக முகாமைத்துவ தகவல் ஒழுங்கமைப்பினுள் பந்தயம் மற்றும் சூதாட்ட வரிக்கு உரிய மொடியூலை அபிவிருத்தி செய்திருக்கவில்லை என்பதனால் மேலே கூறப்பட்ட வரி செலுத்துனர்களின் வருமான அறிக்கை, வரி கொடுப்பனவு, | பந்தயம் மற்றும் சூதாட்ட வரி வகையை RAMIS ஒழுங்கமைப்பினுள் உள்ளடக்குவதற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்பது. | RAMIS 2.0 மொடியூலை அபிவிருத்தி செய்யும் மற்றும் தவறுகளை திருத்தும் நடவடிக்கைகள் விரைவில் பூர்த்தி செய்யப்பட |

| | | |
|---|---|---|
| மதிப்பீடு வழங்குதல், முன்னேற்றம் மற்றும் அனைத்து வரி நிர்வாக நடவடிக்கைகள் கோவை மெனுவல் முறையில் பேணிச் செல்லுதல் மூலம் மேற்கொள்ளப்படுவதனால் தகவல்களின் துல்லியத் தன்மையை கோவைகளின் மூலம் வழங்கப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு கணக்காய்வு நடவடிக்கைகள் உறுதிப்படுத்துவதற்கு நேரிட்டிருந்ததுடன் வரி உத்தியோகத்தர்களின் நிர்வாக வேலைகளைக் குறைப்பதற்கு மற்றும் வரி இணக்கப்பாட்டினைப் பயனுள்ளதாக மேற்கொள்ளுதல் மற்றும் தகவல்களைச் சரியாக மற்றும் இற்றைப்படுத்தப்பட்டு பெற்றுக் கொள்வதற்கு முடியாதிருந்தது என்பது மேலும் அவதானிக்கப்பட்டது. | | வேண்டியதுடன் அனைத்து வரி வகைகளும் ஒழுங்கமைப்பினுள் உள்ளடக்கப்படுதல் சாலச் சிறந்ததாகும். |

4. **மனிதவள முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| **4.1** | **இணைக்கப்பட்டுள்ள பதவியணி, உண்மையான பதவியணி** | | |
| | உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு உரியதான 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் சிரேஷ்ட மட்ட வெற்றிடங்கள் 289 உம் மூன்றாம் நிலை வெற்றிடங்கள் 28 உம் இரண்டாம் நிலை வெற்றிடங்கள் 84 உம் முதலாம் நிலை வெற்றிடங்கள் 105 உம் எனும் ரீதியில் 506 வெற்றிடங்கள் காணப்பட்டன. அதற்கு இணையாக 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் வெற்றிட எண்ணிக்கை முறையே 320, 387, மற்றும் 437 ஆக இருந்தது. இதற்கமைய திணைக்களத்தில் ஊழியர் வெற்றிட எண்ணிக்கை பல வருடங்களில் படிப்படியான அதிகரிப்பு சுட்டிக்காட்டப்பட்டுள்ளதுடன் 2023 | இணங்குகின்றேன் என்பது. | திணைக்கள வெற்றிடப் பதவிகளுக்கு அவசியமான பதவியணியினை ஆட்சேர்ப்பு செய்வதற்கு மற்றும் அத்தியாவசிய வெற்றிடப் பதவிகளைக் குறிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

திசெம்பர் 31 ஆம் திகதியில் அது மொத்த அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையில் 17.6 சதவீதம் ஆகும்.